Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
உள்நாடு வெளிநாடுகளுக்கான சகல விதமான
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S ROAD, JAFFNA T.P: 021-222 2670,
FAX-222 3214. email-del-smskr@eureka.lk

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷ.ஃபான் 20 (17.10.2003) வெள்ளிக்கிழமை இதழ் :17

# இடைக்கால நிர்வாகத்துக்கு செயலுருவம் கொடுக்க தாமதம் ஏற்பட்டால் சமாதான முயற்சி பின்னடையலாம்

## நோர்வே வெளியுறவு அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன்

(ஒஸ்லோ)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் கருணா ஆகியோரது தலைமையிலான குழு நோர்வே வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனை அவரது அமைச்சகத்தில் நேற்று மாலை சந்தித்தது.

விடுதலைப் புலிகள் குழுவினரை அமைச்சர் ஜான் பீற்றர்சன் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், லிசா கோல்டன் ஆகியோர் அமைச்சக வாயிலில் நின்று வரவேற்றனர். மிகவும் சுமூகமான சூழலில் விடுதலைப் புலிகள் அணியினரை வரவேற்பது குறித்து தாம் அகமகிழ்வு கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கிற்கான இடைக் கால நிர்வாக அமைப்பு தொடர்பான வரைபு, அதை நோர்வேத் தரப்பினரிடம் கையளிக்க இருக்கும் காலம் மற்றும் தற்போதைய அரசியல் நிலை பற்றி தாம் அறிந்துகொள்ள ஆவலாக இருப்பதாகவும் தமிழ்ச்செல்வனிடமிருந்து களநிலைபற்றியும் சமாதானத்தின் பெறுபேறுகள் பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவுள்ளதாகவும் பீற்றர்சன் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளை நோர்வே நாட்டிற்கு அழைத்து வெளியுறவு அமைச்சரைச் சந்திக்க ஒழுங்கு செய்த நோர்வே அரசுக்கும் மக்களுக்கும் தமிழ்மக்கள் சார்பிலும் தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் சார்பிலும் நன்றி தெரிவித்த தமிழ்ச்செல்வன் இடைக்கால நிர்வாக வரைபு சமர்ப்பிக்கப்பட இருக்கும் பின்னணியில் இன்றைய அரசியற் சூழலை விளக்கினார்.

'பாரிஸ் நகரில் வரைபு செய்திருந்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துக்கள் தேசியத் தலைவரிடம் எடுத்துச்செல்லப்பட்டு அவரது பரிசீலனையின் பின் மேலும் திருத்தங்கள் செய்யும் தேவை இருந்ததால் இந்த மாதத் தொடக்கத்தில் அயர்லாந்திற்குப் பயணஞ் செய்து அங்கு வெளிநாடுகளிலிருந்து வந்த தமிழ் சட்டவல்லுநர்கள், அரசியல் அமைப்பு வரைபு சார்ந்த நிபுணர்கள் கூடி ஓர் இறுதி வடிவம் கொடுக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் கனடா நேரடியாகப் பங்களிக்க விரும்பம்!

## யாழ்ப்பாணத்தில் பில் கிரஹம் பேட்டி



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் கனடா நேரடியான பங்கினை வகிக்க விரும்புகிறது. அரசுடன் தொடர்ந்தும் இணைந்து இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முழு ஆதரவையும் கனடா வழங்கும் என்று யாழ்ப்பாணம் வந்த கனடிய வெளியுறவு அமைச்சர் பில் கிரஹம் தெரிவித்தார்.

நேற்று யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள யு.என்.டி.பி.விடுதியில் செய்தியாளர்களைச் சந்

## ஜனாதிபதி சந்திரிகா - ரணில் நேற்று சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தமது வர்த்தமானி அறிவித்தலை அச்சிடுவதற்குச் சட்டத்திற்குப் புறம்பாகத் தடுத்தமை, லஞ்ச ஊழல் ஒழிப்புத்தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஆணைக்குழுவில், நிலவிவரும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தவறியதன் மூலம் அதனைச் செயற்படுத்த முடியாது தடுத்தமை குறித்து, பிரதமரிடம் ஜனாதிபதி பிரஸ்தாபித்தாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

நோர்வே வெளிவிவகார அமைச்சின் அழைப்பின் பேரில் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சனை அவரது அமைச்சகத்தில் நேற்று மாலை சந்தித்தது.

விடுதலைப் புலிகள் குழுவினரை அமைச்சர் ஜான் பீற்றர்சன் சிறப்புத்

வும் சுமூகமான சூழலில் விடுதலைப் புலிகள் அணியினரை வரவேற்பது குறித்து தாம் அகமகிழ்வு கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பான வரைபு, அதை நோர்வேத் தரப்பினரி

லாக இருப்பதாகவும் தமிழ்ச்செல்வனிடமிருந்து களநிலைபற்றியும் சமாதானத்தின் பெறுபேறுகள் பற்றியும் விரிவாக அறிந்துகொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தவுள்ளதாகவும் பீற்றர்சன் தெரிவித்தார்.

தமிழ்மக்களின் பிரதிநிதிகளை

ளுக்கும் தமிழ்மக்கள் சார்பிலும் தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் சார்பிலும் நன்றி தெரிவித்த தமிழ்ச்செல்வன் இடைக்கால நிர்வாக வரைபு சமர்ப்பிக்கப்பட இருக்கும் பின்னணியில் இன்றைய அரசியற் சூழலை விளக்கினார்.

திருத்தங்கள் செய்யும் தேவை இருந்ததால் இந்த மாதத் தொடக்கத்தில் அயர்லாந்திற்குப் பயணஞ் செய்து அங்கு வெளிநாடுகளிலிருந்து வந்த தமிழ் சட்டவல்லுநர்கள், அரசியல் அமைப்பு வரைபு சார்ந்த நிபுணர்கள் கூடி ஓர் இறுதி வடிவம் கொடுக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில்

# கனடா நேரடியாகப் பங்களிக்க விருப்பம்!

## யாழ்ப்பாணத்தில் பில் கிரஹம் பேட்டி



(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியில் கனடா நேரடியான பங்கினை வகிக்க விரும்புகிறது. அரசுடன் தொடர்ந்தும் இணைந்து இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு முழு ஆதரவையும் கனடா வழங்கும் என்று யாழ்ப்பாணம் வந்த கனடிய வெளியுறவு அமைச்சர் பில் கிரஹம் தெரிவித்தார்.**

**நேற்று யாழ்.கோவில் வீதியில் அமைந்துள்ள யு.என்.டி.பி.விடுதியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

நாட்டின் சமாதான முன்னெடுப்புக்களின் நெருக்கடிகளை அறிந்து கொள்ளவும், சமாதானத்திற்கு கனடிய அரசின் உறுதியான ஆதரவைத் தெரியப்படுத்துவதற்காகவுமே தாம் இலங்கைக்கு வந்துள்ளேன்.

பல வருடங்களாக இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் நெருக்கமாக நான் ஈடுபட்டுவருகிறேன். எனது தொகுதியிலும் - இங்குள்ள பிரச்சினைகளால் இடம்பெயர்ந்தவர்கள் குடியேறியுள்ளனர்.

நான் இன்று யாழ்ப்பாணம் வந்து முதலில் இங்குள்ள அழிவுகளையும், நெருக்கடிகளையும் பார்வையிட்டேன். இதன்மூலம் தற்போதைய இங்குள்ள நிலைமைகளைப் புரிந்துகொண்டேன். இன்று படைத்தரப்பின் தளபதிகளையும் சந்தித்து பிரச்சினையாகவுள்ள உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக கலந்துரையாடினேன்.

அத்துடன் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்தேன். இங்கு பொதுமக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தராஜா மீதான குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல!

### உள்துறை அமைச்சின் செயலாளர் அறிக்கை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா மீது, சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக் கொள்ளப்படத்தக்கவையல்ல என்று, உள்துறை அமைச்சின் செயலாளர், வழங்கியிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் எம்.என். ஜூனைட் தனது அறிக்கையை நேற்று ஜனாதிபதியிடம் கையளித்திருப்பதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்கள் கையளித்திருக்கும் அறிக்கையில், முன்னாள் பொலிஸ்மா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தீ விபத்தில் மூவர் பலி

தெல்தெனிய அம்பாலிக் கிராமத்தில் இருக்கின்ற வீடொன்றில், ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் தந்தையும், இரு பிள்ளைகளுமே உயிரிழந்துள்ளார்கள். இந்தத் தீ விபத்து நேற்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகா - ரணில் நேற்று சந்தித்துப் பேச்சு!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தமது வர்த்தமானி அறிவித்தலை அச்சிடுவதற்குச் சட்டத்திற்குப் புறம்பாகத் தடுத்தமை, லஞ்ச ஊழல் ஒழிப்புத்தொடர்பான விசாரணைகளை நடத்தும் ஆணைக்குழுவில், நிலவிவரும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தவறியதன் மூலம் அதனைச் செயற்படுத்த முடியாது தடுத்தமை குறித்து, பிரதமரிடம் ஜனாதிபதி பிரஸ்தாபித்தாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## பதில் பொலிஸ்மா அதிபராக ரி.ஐ.டி. சில்வா நியமனம்!

### ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் - ரி.ஐ.டி.சில்வாவை, பதில் பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நியமித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் நியமனத்தை, அரசியலமைப்பு மன்றத்திடம் இருந்து, ஜனாதிபதி எதிர்பார்ப்பதாக, ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பதில் பொலிஸ்மா அதிபரை, ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், நியமித்திருப்பதாக அவரது செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கான அதிகாரம், யாப்பின் 41 சி இரண்டாம் பிரிவின் கீழ்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வரைபு கிடைத்ததும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது தொடர்பான காலமும், இடமும், வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது தீர்மானிக்கப்படும் என்று, அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே, அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கம் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகளின் போது, முஸ்லிம் தரப்பினரின் தனித்துவத்தை ஏற்படுத்துவதில் அதிக கவனம் செலுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாக சபைக்கு பொ.ஐ.மு.ஆதரவு வழங்கினால்தான் பொதுமக்களின் ஆதரவைப் பெறலாம்

### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி, இடைக்கால நிர்வாக சபைக்கு ஆதரவு வழங்கினால்தான், மக்களின் ஆதரவைப் பெறமுடியும் என்று, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை அரசாங்கம் ஆரம்பித்தால்தான், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக தோன்றியுள்ள எதிர்ப்புக்களைக் குறைத்துக்கொள்ள முடியும்.

கூடிய விரைவில் இனப்பிரச்சினையைத் தீர்த்து, அமைதியை நிலைநாட்ட முக்கியமான அரசியல் கட்சிகளுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை.

சமாதான நடவடிக்கைகளைக் கண்டித்து பொதுஜன ஐக்கிய முன்னணி - எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும், பாதயாத்திரைகளையும் ஏன் நடத்துகிறது? சமாதான முயற்சியில் அவர்கள் கண்ட பிழை என்ன? அப்படியானால், இனப்பிரச்சனைக்காக அவர்கள் முன்வைக்கும் தீர்வுத் திட்டம் என்ன?

ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பதற்காக, அரசாங்கத்தின் சமா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# பேரினவாதத்தின் தொடரும் இனவெறிப் போக்கினால் சமாதானம் மீது தமிழ்மக்கள் நம்பிக்கையிழப்பு!

## கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா பேரினவாதத்தின் விடாப்பிடியான இனமொழிப் போக்கினால் அல்லலுற்ற எமது மக்கள் போர்நிறுத்தம் மீதும், தொடர்ந்த சமாதான முயற்சிகளின் மீதும் நம்பிக்கை இழந்துவருகின்றனர்.

இவ்வாறு, கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் -தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிங்கள அரசாங்கங்களின் பேரினவாத செயற்பாடுகள் காரணமாக, தமிழ்மக்களது இருப்பையும், பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்கான அனைதது்ப் போராட்டங்களையும் முன்னெடுத்துச செல்லும் எமது தலைமைத்துவமாகிய தங்களிடம் எமது நிலைப்பாட்டைக்கூற விரும்புகின்றோம்.

இலங்கை அரசும்- தாங்களும் இணங்கிக் கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கையானது வடக்கு - கிழக்கில் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலையை உருவாக்குவதையே அடிநாதமாக கொண்டுள்ளது. ஆனால், மீள்குடியமர்வும் புனர்வாழ்வுக்குமான செயற்பாடுகள் எதுவுமே காத்திரமாக முன்னெடுக்கப்படாத நிலையில் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகினர்.

சமாதான முன் முயற்சிகளில் முதன்மையானதும், தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததுமாகிய மக்களின் மீள்குடியமர்வும், இயல்பு நிலைக்குத் திரும்புவதும்- கானல் நீராகிவிடலாம் என்ற கவலையே மிஞ்சியுள்ளது.

நிர்வாகக் கட்டமைப்பு, சட்டம், நிதி, காணி, பொருளாதாரம் சம்பந்தப்பட்ட விடயங்கள் பூரண அதிகாரம் படைத்ததாக விளங்கவேண்டும். இவ் அதிகாரங்கள் மூலமாகவே புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் ,மீள்குடியேற்றம், நிர்வாகக் கட்டமைப்பு தங்களது தலைமையிலான தமிழீழவிடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதே எமது அபிலாஷை ஆகும். தமிழ்மககளது எதிர்காலம் வளம்மிக்க வாழ்வினை உறுதிசெய்வதற்கான வல்லமை கொண்டுள்ள தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.செயலகம் முன்பாக

# நிமலராஜன் படுகொலையைக் கண்டித்து இன்று உண்ணாவிரதப் போராட்டம்!

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்தும், இவர் படுகொலை செய்யப்பட்டமைக்கு பிரதமர் உடனடியாக விசேட விசாரணைக்குழு அமைத்து நீதி வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ் பத்திரிகையாளர் மீது தொடரும் வன்முறைகளை நிறுத்தி உடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குமாறு கோரியும், இன்று காலை 9.30 மணிக்கு யாழ். செயலகத்திலுள்ள தகவல் திணைக களத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்து ஆதரவு வழங்குமாறு, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய எழுச்சி பேரவையினர், சர்வதேச மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பல்கலைக் கழக மாணவர்கள், மனிதநேய அமைப்புக்கள், தமிழ் மண்பற்றாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் ஆகியோரை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் கேட்டுள்ளது.

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும், திரைப்படக் காட்சித் தொடரில், சிவாஜிகணேசன் நடித்துள்ள 'கப்பலோட்டிய தமிழன்' எனும் தமிழ் திரைப்படம், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

# கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்கள் தமிழ்,இலக்கிய விழாவில் திட்டமிட்ட புறக்கணிப்பு!

## கண்டித்து அழகியல் கலாமன்றம் அறிக்கை

யுத்த கொடூரங்கள் நிறைந்த காலப் பகுதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய இரு மாவட்டங்களிலிருந்தும் உலகம் வியக்கும் கலை, இலக்கியப் படைப்புக்களும், ஆற்றுகை வெளிப்பாடுகளும், வெளிவந்திருக்கின்றன. ஆனால், தங்களது விழாச் செயற்பாட்டுக்குழுவுக்கு இந்த விடயம் ஏன் புரியவில்லை என்பது எமக்குத் தெரியாமலுள்ளது. இநதச் செயற்பாடு திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட விடயமாக இருக்குமோ என எம்மால் எண்ணத்தோன்றுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஏற்பாட்டுக்குழுவினர், இன்று இந்த வருடத்திற்கான தமிழ் இலக்கிய பெரு விழாவை நடத்துகின்றனர். இந்த விழாவிற்கு, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த கலை, இலக்கிய படைப்பாளிகள் எவரும் அழைக்கப்படாமையைக் கண்டித்து, கிளிநொச்சி மாவட்ட அழகியல் கலாமன்றத்தினர் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையின் விபரம் வருமாறு -

இன்று நடத்தப்படவிருக்கும் வட- கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய செயற்பாட்டிற்காக எமது மனமார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இருந்தும், அரசினால் நடத்தப்பட்ட கொடூர யுத்தத்தின் கோரப்பற்களால் நசியுண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேங்களிலிருந்து எந்தொரு ஆற்றுகையோ அல்லது கலை, இலக்கியப் படைப்பாளிகளின் உணர்வுகளை வெளிப்படுத்தும் உரைகளோ பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை, எமக்கு மிகவும் வேதனை தருகிறது. அத்தோடு வட -கிழக்கு மாகாணத்திற்கு உள்ளடங்கலாகவே கிளிநொச்சி முல்லைத்தீவு என்பன அடங்குகின்றது என்பது உண்மையே.

தமிழினம் இன்று தலைமிர்ந்து நிற்பதற்காக, தம் உயிர்களை தியாகம் செய்தும் - தமிழர் தம் வாழ்வை கேடயம் போல் கட்டிக்காத்தும் வரும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் எவரையும் இந்த விழாவில் பிரதிநிதித்துவப்படுத்தப்படாமை , எமக்கு மேலும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, இந்த செயற்பாட்டிற்காக நாம் எமது கண்டத்தையும், எதிர்ப்பையும் தெரிவிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீபாவளி தினத்தன்று மக்கள் வங்கி திறக்கும்

தீபாவளி தினத்தன்று, யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் வங்கியின் கிளைகள் யாவும், காலை 9 மணிமுதல் 12 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி தினத்தன்று ரூபா பத்தாயிரம் ரூபாவை ஒரு வருட காலத்தில் சேமிப்பு கணக்கில் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் பெறுமதி வாய்ந்த குத்துவிளக்கு ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளது.

மக்கள் வங்கியின் ஜெயசிறி பரிசுச் சீட்டிழுப்பில் மார்ச், ஏப்பிரல் மாதங்களில் பரிசுபெற்றவர்களுக்கு உரிய பரிசுகளுக்கான தங்க நாணயங்களை - அந்தந்த கிளைகளில் தீபாவளி தினததன்று பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் பிரதேச முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# வலிகாமம் கல்வி வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்!

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட யா/நடேஸ்வராக் கல்லூரி, தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை - ஆகிய பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது. யா/ நடேஸ்வராக் கல்லூரிக்கு இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும், யா/தொல்புரம் அ.மி.த.க பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2:1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை 27.10.2003 ஆம் திகதிக்கு முன், உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலத்திற்கு அனுப்பி வைக்குமாற கல்விப்பணிப்பாளர் தெ.இருதயநாதன் அறிவித்துள்ளார்.

## சட்டமாணிக் கற்கைநெறிக்கு அனுமதிப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழக சட்டமாணிக் கற்கைநெறிக்கான அனுமதிப்பரீட்சை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிமை காலை 10 மணிக்கு, செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டையில், பரீட்சை நிலையம் - யாழ். மத்திய கல்லூரி எனத தவறுதலாக அறிவிககப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பரீட்சார்த்திகள் இதனைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.


ராஜா யாழ்ப்பாணம்.

21வரை பிரசாந், கிரண், வடிவேல் நடித்த

வின்னர்

காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)

24 ஆம் திகதி முதல்

பிதாமகன்

(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல் விஜயகாந், சங்கீதா நடித்த

அலெக்சாண்டர்

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

TUXEDO

(சி-1618)

மாபெரும் இசைநிகழ்வும் உலக சாதனை முயற்சியும்

வறிய மாணவர் கல்வி வளர்ச்சி நிதிக்காக பிரபல பாடகர் என். ரகுநாதன் அடங்கலாக வவுனியா, ராக ஸ்வரங்கள், யாழ். ஐங்கரன் இசைக்குழுவினரின் இசைநிகழ்வும், சி. சுதாகரனின் மயிர்கூச்செறியும் சாகச நிகழ்வும்

இடம்:- யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மைதானம்

காலம்:- 18,19,10.2003 சனி, ஞாயிறு

நேரம்:- மாலை 4.00 மணி

சுதாகரனின் சாகச நிகழ்வுகள் சில

- தலைமுடியால் லொறி இழுத்தல்.
- காதினால் பாரம் தூக்குதல்.
- நாக்கினால் ஓட்டோ இழுத்தல்.
- ஓடும் இரண்டு காரை இழுத்து நிறுத்துதல்.
- கழுத்தில் தூக்குப்போட்டுத் தொங்குதல்.

இன்னும் பல மயிர்கூச்செறியும் நிகழ்வுகள் அனைவரும் கண்டுகளியுங்கள்.

ஊடக அனுசரணை நமது ஈழநாடு தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




# ஊடகவியலாளர் மீதான தாக்குதலை விசாரிக்க

# சுதந்திரமான விசாரணைக்குழு நியமிக்கவேண்டும்

## ஊடகவியலாளர் ஒன்றியம் பிரதமருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாம்பழம் சந்தியில் கடந்த சனிக்கிழமையன்று தமிழ் ஊடகவியலாளர்கள் மீது படையினர் மேற்கொண்ட தாக்குதல்கள் தொடர்பாக, விசாரணை நடத்துவதற்காக சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும். குற்றவாளிகளைக் கண்டு பிடித்து, நீதியின் முன் நிறுத்த வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நெல்லியடி, கொக்குவில் ஆகிய இடங்களில் ஏற்கனவே 4 ஊடகவியலாளர்களும், யாழ். மாம்பழம் சந்தியில் 5 ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டு, காயமடைந்திருக்கிறார்கள். அவர்களின் படப்பிடிப்புக் கருவிகளும் சேதமாக்கப்பட்டிருக்கின்றன.

போர்நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்ட பின்னர், 9 ஊடகவியலாளர்கள் படையினரால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதேபோல் மட்டக்களப்பு, வவுனியா பிரதேசங்களிலும் ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஊடகவியலாளர்களுக்கெதிரான இத்தகைய அராஜகத்தைத் தடுத்து நிறுத்த சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புக்கள் முன்வரவேணடும் என, பிரான்ஸ் நாட்டைத் தலைமையகமாகக் கொண்ட எல்லை கடந்த ஊடகவியலாளர்கள் அமைப்பு, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு உட்பட, சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகளுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கு - கிழக்கிலுள்ள ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக சிறிலங்காப் படைகளால் தாக்கப்பட்டு வருகின்றபோதிலும், அரசாங்கம் உரிய விசாரணைகள் நடத்தி, குற்றவாளிகளைத் தண்டிக்க முன்வரவில்லை. இலங்கையில் தமிழ் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே, தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை உடன் நிறுத்துவதற்கும், தாக்குதல்களை நடத்தியவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கு, இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு, சர்வதேச ஊடக அமைப்புக்களிடமும், மனித உரிமை அமைப்புக்களிடமும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.



நோர்வேக்கு விஜயம் செய்துள்ள தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகள் தரப்புக் குழுவினர் - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசன் தலைமையிலான அதிகாரிகளை, நேற்றுமுன்தினம் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்களைக் காணலாம்.

# அரச ஊழியர் சம்பள உயர்வு; அமைச்சரவை கூடி ஆராயும்!

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வு தொடர்பாக, அமைச்சரவை ஆராய்ந்து தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற சம்பள உயர்வானது, ஒரு வருடத்திற்கு ஒருமுறை அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை வழங்கப்படவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், ஒருவருடமா அல்லது இரண்டு வருடமா என்பது குறித்து உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டு, அரச ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, அரச ஊழியர்கள் தமக்குச் சம்பள உயர்வு வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, போராட்டங்களில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அடிப்படை உரிமை மீறல் மனுவிற்கு எதிராக

# அரச மருத்துவர் சங்கத்தினால் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்!

அரச மருத்துவர் சங்கம் - தனக்கு எதிராக விவசாயி ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடர்பாக, ஆட்சேபனை மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

வேலைநிறுத்த காலத்தில் அரச மருத்துவ சங்கம் செயற்படாத காரணத்தால், தனது குழந்தை இறந்ததாகக் கூறி, விவசாயி ஒருவர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் ஒன்றை தாக்கல் செய்திருந்தார்.

தன்னுடைய குழந்தை ஆபத்தான நிலையில் இருந்தபோது - பொலநறுவை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும், பின்னர் அங்கிருந்து கண்டி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சமயம், அங்கு வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது எனவும் -

பொலநறுவை வைத்தியசாலையில் தன்னுடைய மகள் இறந்துவிட்டதாகவும் கூறி, இதற்கான முழுப்பொறுப்பையும் அரச மருத்துவ சங்கமே ஏற்கவேண்டும் என்றும் தெரிவித்து, நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்கு எதிரான, ஆட்சேப மனுவைத் தற்போது அரச மருத்துவர் சங்கம் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது.

வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடுவதற்குத் தமக்கு உரிமை இருப்பதாகவும், இந்தச் சுதந்திரத்தை எவரும் பறிக்கமுடியாது என்றும், வேலைநிறுத்த காலத்தில் ஏற்பட்ட இழப்புகளுக்காக, தம்மீது குற்றஞ்சாட்டக்கூடாது என்றும், அரச மருத்துவ சங்கம் தனது ஆட்சேப மனுவில் குறிப்பிட்டுள்ளது.

தமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவை ஏற்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் எதுவும் கிடையாது என்றும், தாம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்பு அல்ல என்றும், அரச மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. (01)

### கட்டுநாயக்க விமானநிலையத்தில்

# சிகரெட்டுக்களை கடத்தியோரிடம் தண்டப்பணம் அறவிடப்பட்டது!

(கொழும்பு)

கட்டுநாயக்க விமானநிலையத்தில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

தங்க நிறத்திலான பொதிகளில் இவை பொதி செய்யப்பட்டிருந்தன. இவ்வாறு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 80 ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா அளவில் இருக்கலாம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், இச்செயல்களில் ஈடுபட்டவர்களிடம் இருந்து 1 லடசத்து 50 ஆயிரம் ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது. (01)

### குற்றச்செயல்கள் தொடர்பாக பலர் கைது

பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக, பொத்துவில் காவல்துறையினர் பலரைக் கைதுசெய்துள்ளனர்.

பாடசாலை அதிபர் ஒருவர் 9 வயது மாணவியை வல்லுறவுக்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு, நேற்று நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார். இவரை எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல லகுகல, உல்ல மற்றும் பாணம பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஆறு பேரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பொலிஸ்மா அதிபரின் கடமையில் 4 உதவிப் பொலிஸ் அதிகாரிகள்!

## பொலிஸ் திணைக்களம் தெரிவிப்பு

புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படும் வரையும் சிரேஷ்ட உதவிப் பொலிஸ் அதிகாரிகள் நான்குபேரும், பொலிஸ் மா அதிபர் கவனித்து வந்த திணைக்களங்களுக்குப் பொறுப்பாக இருப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதில் உள்ள இழுபறிநிலையினைப் போன்று, இதுவரை இலங்கையின் வரலாற்றில் இடம்பெறவில்லை என்றும் பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

# தேர்தல் வேட்பாளர் பட்டியலில் 30 வீதம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும்

## சுயாதீன தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு

எதிர்வரும் தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் மத்தியில் 30 வீதம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை, சுயாதீன தேர்தல் தெரிவு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெண்களின் பொறுப்புணர்ச்சிகளையும், அவர்களின் கடமையுணர்வுகளையும் மதிக்கும் வகையில் இந்தப் பரிந்துரைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிந்துரையை சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான தினேஸ் குணவர்த்தன முன்வைத்துள்ளார்.

இதேவேளை, ஜேர்மனியில் இருந்து வந்திருக்கும் அந்த நாட்டின் தேர்தல் முறைமை தொடர்பான அதிகாரி ஒருவரை, இலங்கைத் தேர்தல் தெரிவு ஆணைக் குழுவிற்கு முன்னால் இன்று விளக்கம் அளிப்பதற்கான ஏற்பாடுகளை, அமைச்சர் கரு ஜெயசூரியா மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருதுவழங்கும் விழாவில் - ஈழநாதம் ஆசிரியர் பொ.ஜெயராஜ் விருதுபெறுவதை முதல் படத்திலும், வீரகேசரி ஆசிரியர் நடராஜா விருது பெறுவதை இரண்டாவது படத்திலும், அம்பாறை செய்தியாளர் சலீம் விருதுபெறுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# நாகர்கோவில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோரை

# புலிகளின் கட்டுப்பாட்டில் குடியமர்த்த நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாகர்கோயில் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில், ஒரு பகுதியினர் - பருத்தித்துறையில் தற்காலிகமாகக் குடியேறியுள்ளனர்.

இவர்களையே தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருக்கும் வடமராட்சி கிழக்கின்-குடாரப்புப் பகுதியில், குடியமர்ந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில், 1999 ஆம் ஆண்டு இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் காரணமாகப் பல குடும்பங்கள் இடம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில், ஒரு தொகுதியினர் - தற்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின்கீழுள்ள தமது இருப்பிடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

ஆனால், நாகர்கோயில் பகுதியில் படையினர் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்து, அந்தப் பிரதேசத்தை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இந்த மக்களையே தற்போது குடாரப்புப் பகுதியில் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறையில், தனியார் காணிகளில் குடியமர்ந்துள்ள மக்களை, அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறு, காணி உரிமையாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக, யாழ். மாவட்ட அரச அதிபரிடம் முறையிடப்பட்டபோது, இம் மக்களைக் கரையோரக் கிராமமான கொட்டோடைப் பகுதியில் மீளக் குடியமர்த்த, அரச அதிபர் நடவடிக்கைகளை எடுத்திருந்தார்.

தமது தொழில் வாய்ப்புக்களைக் கவனத்திற்கொண்டு, இந்தப் பிரதேசத்தில் குடியேற மக்கள் விரும்பாமையினால், அந்த முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போது இம் மக்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

(202)





அண்மையில் நடைபெற்ற வல்லிபுரவாழ்வார் கோயில் தீர்த்த உற்சவத்தின் ஒரு காட்சியை மேலுள்ள படத்திலும், வன்னி மாவட்ட கலைஞர்களால், யாழ். குடாநாட்டில் நடத்தப்பட்டுவரும் "மறுமலர்ச்சி" என்ற வீதிநாடகத்தின் ஒரு காட்சியை கீழுள்ள படத்திலும் காணலாம். (91,111)

# மணற்காட்டிலிருந்து மணலை விற்க புனரமைப்பு நிறுவனத்துக்கு அனுமதி

(வடமராட்சி)

மணற்காடு, குடத்தனை பகுதியிலிருந்து மண் விற்பனை செய்வதற்கு, வடமராட்சி கிழக்கு புனரமைப்பு அபிவிருத்தி நிறுவனத்துக்கு தகுதி வாய்ந்த அதிகாரி - அனுமதி வழங்கியுள்ளார்.

மண் எவ்வித கட்டுப்பாடுமின்றி வழங்கப்படும் எனவும், இதை ஏற்றிச் செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரம் - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரினால் பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள கட்டடத்தில் இயங்கும், உப பணிமனையில் வைத்து அலுவலக நாட்களில் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக எவ்வித சிபார்சோ அல்லது கடிதங்களோ தேவையில்லை என, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு நடாத்தும், ஆன்மீகச் சொற்பொழிவு - இன்று மாலை 5 மணிக்கு, நாவலர் மணிமண்டபத்தில் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் "நாவலரும் நாமும்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## மீண்டும் மினிபஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், நேற்றுமுதல் சுன்னாகம்-சாவகச்சேரி (பாதை இல: 775) இடையேயான போக்குவரத்துச் சேவையில் தனியார் சிற்றூர்திகள்-சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கங்களின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(202)


## வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.சாலினி
முகவரி : இராஜ வீதி, அச்சுவேலி.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : செ.சபேசன்
முகவரி : குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றோர் ஒப்பம்


# காரைநகர் பகுதியில் புதிதாக கமநலசேவைகள் நிலையம்

காரைநகர் பிரதேச விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைக்கிணங்க, வலந்தலை சந்தியில் - புதிதாகக் கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நாட்டிவைத்தார். இந்த வைபவத்தில், கால்நடை அபிவிருத்தி அமைச்சு செயலாளர் தனுசேன ஹெட்டியாராச்சி, கமநலசேவை திணைக்கள ஆணையாளர் லூக்கஸ் இந்துருவல்ல, கொப்பேகடுவ விவசாய ஆராச்சி நிலையப் பணிப்பாளர் எஸ். சொய்ஸா ஆகியோரும் கலந்து கொண்டனர். (101)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸினருக்கு கொழும்பு தலைமையகம் பாராட்டு

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் மேற்கொண்ட காலப்பகுதியில், அந்நிய சக்திகள் வைத்தியசாலைக்குள் கடமைபுரிவதை தவிர்க்கும் வகையில் - சென்.ஜோன்ஸ் அம்புன்ஸ் படைப்பிரிவினர் மேற்கொண்ட மனிதாபிமான சேவைகளை, வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் பாராட்டியுள்ளார்.

இதேவேளை, தொடர்சேவை ஆற்றிய பாடசாலைகளுக்கும், அணியினருக்கும் பாராட்டுப்பத்திரங்கள் - கொழும்பு தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111)

## மிதிவெடி அகற்றல்

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினரால், யாழ். ரயில் நிலையப்பகுதியில் - மிதிவெடி அகற்றும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீண்டகாலமாக மிதிவெடி அபாயம் நிறைந்த பகுதியாக இவ்விடம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (111)

## பாடசாலை நூலக வாரம்

நூலகம், கற்றலுக்கான வளநிலைய அபிவிருத்தி என்பவற்றில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக, இந்த வருடமும் சர்வதேச பாடசாலை நூலக வாரம் - எதிர்வரும் 21 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை சகல பாடசாலைகளிலும் கொண்டாடப்படவுள்ளது.(101)

# சாவகச்சேரியில் பொலிஸார் ஐந்து பேரை கைதுசெய்தனர்!

சாவகச்சேரி நகர்ப் பகுதியில், சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நான்கு இளைஞர்கள்-பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிள்கள் - பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு சாவகச்சேரி நகரில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொலிஸாரே இவர்களைக் கைதுசெய்தனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக, சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இவர்களை, பொலிஸார் விசாரணை செய்தபோது, இவர்கள் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கினர்.

இதனால் சந்தேகம் கொண்ட பொலிஸார் - இவர்களைக் கைது செய்து, மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். இந்த இளைஞர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் கைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (202)

# காவலரணுடன் பஸ் மோதியதில் இரு இராணுவத்தினர் படுகாயம்

வடமராட்சி - நெல்லியடியில் நேற்றுமுன்தினம் இரவு பிரயாணிகள் பேரூந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, அருகிலுள்ள இராணுவக் காவலரணுடன் மோதியதில், இரு இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

நெல்லியடியில் உள்ள ஈ.பி.டி.பியினரின் முகாமிற்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த காவலரணுடனேயே இந்தப் பேரூந்து மோதியது. நெல்லியடியின் மத்திய பகுதியில் அமைந்திருந்த ஈ.பி.டி.பி. அலுவலகம் பொதுமக்களால் தாக்கப்பட்டதையடுத்து, இராணுவப் பாதுகாப்பை ஈ.பி.டி.பி. கோரியதனால், அவர்களது அலுவலகத்திற்கு அருகே இந்த விசேட இராணுவக் காவலரண் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எதிராக வந்த இன்னுமொரு பேரூந்திற்கு, இடம் கொடுப்பதற்காகத் திருப்பிய வேளையில், ஓட்டுநர் தனது கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு வெளியேறியதில், இடையில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் மீது மோதியது, அந்தக் காவலரண் முற்றாக சேதமடைந்ததுடன், அங்கு கடமையிலிருந்த இரு இராணுவத்தினரும் படுகாயங்களுக்குள்ளாகினர்.

இவர்கள் சிகிச்சைக்காகப் பலாலி இராணுவ மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இராணுவக் காவலரணுடன் மோதிய பேரூந்தைப் பொலிஸார் விசாரணைக்காக எடுத்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சந்தை வாய்ப்பிருந்தும் இலாபம் பெறமுடியாதுள்ளது

எழுவைதீவின் தென்முனையிலிருந்து வடமுனையை நோக்கி,



கால்நடையாகப் பயணித்துக் கொண்டிருக்கிறேன். இடையில் எனது நண்பர் எதிர்ப்படுகின்றார். இருவரும் - மாலைப்பொழுது மயங்கிக்கொண்டிருக்கும் வேளையில், க.நடராஜா ஐயா வீட்டை அடைகின்றோம்.

தீவுக் கடகங்கள் எனப் பெயர் பெற்ற நார்க்கடகங்களை இழைத்



துக் குடிசைத் தொழிலை மேற்கொள்ளும் குடும்பம்தான் நடராஜா ஐயா குடும்பம்.

எனக்கு இவர்கள் புதியவர்கள். எனது நண்பன் என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றார். இன்முகத்துடன் வரவேற்று, பண்புடன் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள் நடராஜா ஐயாவின் புதல்விகள்.

தாய், தந்தை, பிள்ளைகள் என எல்லோருமே இந்தத் தொழிலை ஒருமித்துச் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. எமது உரையாடலிற்கு இடையில் இழைத்த நார்க்கடகத்துடன் வந்த வயோதிபமாது ஒருவர் - உரையாடலை இடைமறிக்கின்றார். நான், என்னை அறிமுகப்படுத்தி, எனது செவ்வியை ஆரம்பிக்கிறேன்.

எழுவைதீவு - இரண்டாம் வட்டாரத்தில் புஸ்பராணி சின்னத்துரை, சிறுபிள்ளையாக இருந்த காலம் தொடக்கம் இன்றுவரைக்கும் பன்னவேலையைச் சீவனோபாயத் தொழிலாகக்கொண்டு, வாழக்கைச் சக்கரத்தை நகர்த்தி வருபவர்.

தான், பன்னவேலையைக் கற்றுக்கொண்ட முறைபற்றிக் கூறும்போது, நான் பாடசாலையில் பன்னவேலை முறையாகக் கற்கவில்லை. எனது பெற்றோர் வழியிலே பரம்பரை பரம்பரையாகக் கற்றுவந்த கலைதான் பன்னவேலை. ஆரம்ப காலத்திலிருந்தே பாய், பெட்டி, சுளகு, திருகணைகள், கடகம் எனப் பல்வேறு பன்னவேலைகளைச் செய்யும் முறைகளை அனுபவ வாயிலாகக் கற்றுக்கொண்டேன். அப்பொழுது, கற்றுக் கொண்ட நார்க்கடகம் இழைத்தல் - இன்று எங்கள் குடும்பத்திற்குச் சுயதொழிலாக அமைந்துள்ளது.

இதன்மூலம்தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கெல்லாம் எனது விடாமுயற்சியும், தன்னம்பிக்கையுமே காரணங்கள் என்று பெருமையாகக் கூறினார்.

தொடர்ந்து, நார்க்கடகம் இழைக்கும் முறைபற்றி தெரிவிக்கும்போது, இது ஓலைக் கடகங்கள் இழைப்பதுபோல இலகுவான காரியமல்ல. முதலிலே நானும், பிள்ளைகள் இரண்டு பேரும் சேர்ந்து

> பொதுவாக பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் - பனம் பொருள் உற்பத்திகளுக்கு நல்ல சந்தைவாய்ப்பு உண்டு. ஆகவே, எமது இந்த குடிசைக் கைத்தொழிலைச் சிறப்பாகச் செய்ய அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் சமூக அமைப்புக்கள் மற்றும் பனை அபிவிருத்திச் சபை என்பன உதவிபுரிதல்வேண்டும்.
>
> **நேர்காணல் -. கிருபா.**

ஓலைகளைச் சிறகடித்து வைப்போம். பின் அவற்றை வார்ந்து, சிறு கட்டுக்களாக்கிக் கொள்வோம். எனது கணவர் கடல்நீரில் மூன்று நாட்களுக்கு மேல் ஊறிய பனை மட்டைகளை கொண்டு வந்து, உரிய முறையிலே அவற்றைச் சீர்செய்து தருவார். அதன் பின்புதான் கடகம் இழைக்கத் தொடங்குவோம்.

கடகங்களிலும் கட்டட வேலைக் கடகம், மில் கடகம் என இரு வேறு வகையுண்டு, ஒருவரால் நாள் பூராக இருந்து இழைத்தால், கட்டட வேலைக்கடகம் ஐந்து அல்லது ஆறு இழைக்கமுடியும். ஆனால், மில் கடகம் என்றால் மூன்று தான் இழைக்க்முடியும். தொடர்ந்து இருந்து இழைக்க இப்ப இயலாதுள்ளது என்று ஆதங்கப்பட்டுக் கூறினார்.

அந்த வேளையில், அம்மா உங்கள் நார்க்கடகங்களுக்குள்ள சந்தை வாய்ப்பைப் பற்றி விரிவாக கூறுவீர்களா? என கேட்டபோது,

கலகலவென பொக்குவாயால் சிரிதது்க் கொண்டு - நாங்கள் இழைக்கிற நார்க்கடகங்களுக்கு இப்ப நல்ல மவுசு இருக்கிறது. ஆனால், போக்குவரத்து வசதிகுறைவாக உள்ளமையால், எங்களால் கூடிய லாபம் சம்பாதிக்க முடியாதுள்ளது. தற்பொழுது- இங்கு வியாபாரிகள் முற்பணம கொடுத்து, நார்க்கடகம் இழைப்பிப்பதால் - குறைந்த விலைக்கே கொள்வனவு செய்கின்றார்கள்.

1989 ஆம் ஆண்டுக்கு முன்பு, பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் இங்கு இருந்து. அப்பொழுது எங்களால் இலகுவில் விற்பனை செய்யமுடிந்தது. தற்போது கற்பகம் இங்கு இயங்காமையால்- நார்க்கடகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை இல்லை. இதனால், சந்தைவாய்ப்பு இருநதும், எங்களால் லாபம் எடுக்க முடியாதுள்ளது என்றார்.

சந்தைப்படுத்துவதற்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்வதாயின் - இருபது கட்டடவேலைக் கடகம் கொண்ட ஒரு சுற்றுக்கு- படகுக்கூலி 20 ரூபா, வான் கூலி 60 ரூபா, விற்பனை செய்யும் இடத்தில் சந்தை வரி 1000 ரூபாவுக்கு 40 ரூபா. அத்துடன், எங்களுடைய போக்குவரத்துச் செலவு 150 ரூபாவுக்கு மேல்வரும். இதனாலேயே, குறைவான விலை என்றாலும், இங்கேயே வைத்து விற்பனை செய்து விடுவோம் என்று கூறினார்.

மழைகாலத்தில் இதற்குரிய மூலப்பொருட்களை எவ்வாறு பெற்று கொள்வீர்கள்.... எனக் கேட்டபோது, மழை ஆரம்பிப்பதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்பே மூலப் பொருட்களை களஞ்சியப்படுத்த ஆரம்பிப்போம். பின்பு, அவற்றை வைத்தே வேலைகளைச் செய்வோம். தொடர்ச்சியாக மழை பெய்யுமாயின், வேலை செய்யமுடியாமல் போய்விடுவதுண்டு. ஏனென்றால், இக்காலத்தில் கூலியாட்கள் பனை மரத்தில் ஏற முன்வரமாட்டார்கள். அத்துடன், ஓலை சிறகடிப்பது, மட்டை வாட்டி எடுபபது எல்லாம் கஷ்டமான வேலை.

இக்காலத்தில் மக்கள் நார்க் கடகங்களைக் கொள்வனவு செய்வது குறைவு என்று, வியாபாரிகளும் குறைநத விலையிலே கொள்வனவு செய்வார்கள். இதனாலும், குறைந்தளவு நார்க்கடகங்களையே இந்தக் காலத்தில் இழைப்போம் என்றார்.

கண்டி வீதி திறக்கப்பட்ட பின்பு நார்க்கடகம் விற்பனையில் முன்னேற்றம் உண்டா எனக் கேட்டபோது- ஆம். பாதை திறந்த பின்புதான் கூடுதலான அளவு விற்பனை நடக்கின்றது. வியாபாரிகளும் அதிகளவில் தொடர்ந்து வந்து, கொள்வனவு செய்கிறார்கள். பத்து வருட காலமாக அடைபட்டுக் கிடந்த எங்களுக்கு, இப்பதான் விடிவு கிடைத்திருக்கிறது என்று கண்கள் கலங்க கூறினார்.

அம்மையாரின் மனதை திசை திருப்பும் முகமாக, உங்களுடைய சுயதொழிலைச் சிறப்பாகச் செய்வதற்கு நீங்கள் எதிர்பார்ப்பது என்ன என்று கூறுவீர்களா? என்று கேட்டபோது- நாங்கள் தொழிலைத் திறம்படசெய்ய வேண்டுமாயின் , மீனவர்களுககு மீனவர் சமாசங்கள் உதவீ செய்வதுபோல, எங்களுக்கும் பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் உதவி புரியவேண்டும். அப்போதுதான் பெருமளவு வேலைகளைச் செய்யமுடியும்.

அத்துடன், எமது தீவில் முன்பு இருந்து இயங்கியது போன்று பனம் பொருள் அபிவிருத்திச் சங்கக் கிளை, மீண்டும் இயங்கவேண்டும். அப்போதுதான், உற்பத்திகளை நிர்ணயவிலையில் விற்பனை செய்யமுடியும். எங்கள் உழைப்புக்கு ஏற்ற லாபமும் பெறமுடியும். அத்தோடு, இங்குள்ள ஏனைய பனம் பொருள் உற்பத்திகளும் வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகும் என்று தன் அடிமன உணர்வுகளை உணர்ச்சி ததும்ப வெளியிட்டார்.

நான் எனது செவ்வியை நிறைவு செய்து கொள்ளும் நோக்கில், இறுதியாகக் கூறவிரும்புவது என்னவென்று கேட்க... வன்னியிலும், யாழப்பாணத்திலும் பொதுவாகப் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள் பாவனைக்குத் தடை விதிக்கப்படடுள்ளது. இந்தநிலையில் பனம் பொருள் உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புண்டு. ஆகவே, எமது இந்த குடிசைக் கைத்தொழிலைச் சிறப்பாகச்செய்ய, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் சமூக அமைப்புக்கள் மற்றும் பனை அபிவிருத்திச்சபை என்பன உதவிபுரிதல் வேண்டும்.

பல இலட்சம் பனைகளுள்ள இத்தவில், பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் - ஓர் கிளையை நிறுவ வேண்டும். அவ்வாறு நிறுவுவதன் மூலம், எங்கள் உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்கிடைக்கும். இதனால், தொழில் நன்கு விருத்தி அடையும். அப்போது எமது இனம்- தன்னிறைவு அடையும் என்று, தன் விருப்புக்களை ஒவ்வொன்றாகக் கூறிமுடித்தார்.

நான் ஒரு பூரணமான செவ்வியைபெற்ற மனநிறைவுடன், அவர்களிடம் விடைபெற்று, எழுவைதீவின் தென்முனையை நோக்கி மீண்டும் பயணத்தை ஆரம்பித்தேன்.




## அன்பின் சிநேகிதிக்கு



நீண்ட நாட்களாக உன்னோடு தொடர்புகொள்ளாமைக்கு முதலில் மன்னித்துக்கொள். ஒருவேளையில் நான் தொடர்புகொண்டாலும், என்னோடு தொடர்புகொள்ள உனக்கு நேரம் இல்லாமலும் இருந்திருக்கலாம். மகளிர் சங்கநிகழ்வுகள், மாலதியின் நினைவுதின நிகழ்வுகள், மற்றும் பெண்கள் தொடர்பான எழுச்சி நிகழ்வுகள் என, கடந்த சிலநாட்களாகவே உனக்கு அதிக வேலைகள் இருந்திருக்கும் என நினைக்கிறேன்.

இன்று உலகெங்கும் பெண்ணியம், பெண்விடுதலை என உரத்த குரலிலே ஒருமித்த கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது வரவேற்கத்தக்க விடயமாகும். அடுப்படிக்குள் கிடக்கும் உனக்கு, படிப்பெதற்கு எனக்கேட்ட வீணர்கள் எல்லாம் எங்கோ ஓடி ஒழிந்து விட்டார்கள்.

பெண என்றால் பிள்ளையைச் சுமப்பவள் என்ற பேதமைகளின காலம் கழிந்தவிட்டது. அவள் பிள்ளையை மட்டுமல்ல வெடிகுண்டையும் சுமப்பவள் எனச் சாதனை படைத்துக்காட்டிய சரித்திரநாயகிகளின் காலம் இது. அவர்கள் வாழும் காலத்தில் வாழ்வதால், நாமும் பெருமைப்பட்டுக் கொள்கிறோம். என்னதான் பெண்விடுதலை, பெண்ணியம் எனப் பலர் குரல்கொடுத்தாலும், உண்மையான விடிவிற்கு இன்னும் நெடுந்தூரம் உள்ளதுபோல் - சிலர் குறைப்பட்டும் கொள்கிறார்கள். அதிலும் உண்மையில்லாமல் இல்லை.

அண்மையிலே சட்டத்துறை நிபுணர்கள் சிலர் நடாத்திய கருத்தரங்கு ஒன்றுக்குச் சென்றிருந்தேன். அந்தக்கருத்தரங்கிலே கருத்து வழங்கிய பலர் - இன்று பெண்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்துள்ளதாக ஆதாரத்தோடு கூறினார்கள்.

சட்டமும், நீதியும் சரியானமுறையில் நடவடிக்கை எடுக்கக்காத்திருந்தும், பாதிக்கப்பட்ட பெண்கள் முன்வருவதில்லை என அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். அதிலும் அர்த்தம் இல்லாமல் இல்லை.

எமது சமுதாய அமைப்பும், கட்டுக்கோப்பும் சிலவேளைகளில் உன்னை வெளியே வர அனுமதிக்காமல் இருக்கலாம். நீதிமன்றம், பொலிஸ் நிலையம் எனத்திரிந்தால் உன்னை வித்தியாசமான கண்கொண்டு ,பார்ப்பார்களோ என்ற பயமும் ஏற்படலாம் அதற்காகவே.

உனக்குள் உள்ளவை தொடர்ந்தும் உனக்குள்ளேயே அமுங்கிக் கிடந்து விடுகின்றன. அறியப்படாமலும் போய்விடுகின்றன.

நான் சார்ந்த ஆணினத்தின் சில புல்லுருவிகள் உன்னை அசிங்கப்படுத்திவிட்டுத் தப்பிவிடலாம். நீயும் சமூக சட்டத்திற்குப் பயந்து, நீதிச் சட்டத்தை நாடாமல் விட்டிருக்கலாம். ஆனால், இதன்மூலம் தட்டிக்கேட்க ஆளில்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன என்பதுபோல, சில ஆண்கள் தொடர்ந்து நடக்கக்கூடும். அதற்கு நீ உடந்தையாக இருப்பதாகவும் சிலரால் பேசப்படலாம்.

அச்சப்படாதே!

வெளியே வா! உனக்கு ஆதரவுக் கரம் தர அநேக கைகள் காத்திருக்கின்றன. உரியவழிகளில், உரியவர்களை அணுகு. உலகம் உன்வசம் திரும்பும். உன்னைத் தொடர்ந்து இன்னும் ஓரிரண்டு பெண்கள் வருவார்களாக இருந்தால், எவரும் உன்னோடு வாலாட்டமுடியாது.

அதன்மூலமாக, ஒட்டுமொத்த பெண்ணினத்திற்குமே உதவிசெய்த பெருமை உனக்குக் கிட்டலாம். நீ அறிந்திருப்பாய் என நினைக்கிறேன். சீதனக் கொடுமையாலேயே பெண்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவங்கள் மலிந்தபோன எமது அண்டை நாட்டில், நடந்த ஒரு சங்கதி பல பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

திருமணம் முடிப்பதற்குச் சீதனம் கேட்டார்கள் என்பதற்காக, மாப்பிள்ளை வீட்டார்மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளார் ஒரு பெண். அவளது துணிச்சலைப் பல பெண்கள் அமைப்புக்களும் பாராட்டி உள்ளதாகவும் கேள்வி.

எல்லாவற்றுக்கும் மேலாக நீதியும் அவள் பக்கமெனப் பேசிக்கொள்வார். அதற்காக, உன்னை நான் சீதனம் கேட்கும் ஆண்களுக்கெதிராகப் பொலிஸ"க்குப்போ எனச் சொல்லவில்லை. உடலாலே, உள்ளத்தாலே உன்னைச் சீண்டுபவர்களுக்காக நீதிமன்றம் போ. அதன்மூலம் பல நன்மைகள் விளையும்.

இன்னும் உன்னோடு பல பேசவேண்டியுள்ளது. வரும் வாரம் பேசலாம் என் எண்ணுகிறேன். தற்போது விடைபெறுகிறேன்.

**அன்பின்**
**சிநேகிதன்.**

## தாய்ப்பால் முதல் — முதலுதவி வரை

இரவில் தூங்கிக்கொண்டிருக்கும்போது, திடீரென எழுந்து அழும் குழந்தைகள், பல வீடுகளில் உண்டு. காரணம் பசியாக இருந்தால் பிரச்சினை இல்லை. பால் கொடுத்தால் அழுகை அடங்கிவிடும்.

### தூக்கம்

வேறு காரணங்களால் குழந்தைகள் பாதித் தூர்க்கத்தில் எழுந்தால் என்னசெய்வது?

உங்களுடைய சில பழக்கங்களை மாற்றிப்பாருங்கள் -

குழந்தைகள் இரவு உணவை உட்கொண்டபின்பு தூங்க வையுங்கள். ஏனெனில், உணவை அருந்தும்போது, தூங்கும் குழந்தையை,



தாயிடமிருந்து அல்லது பால் புட்டியிலிருந்து பிரிக்கப்படும்போது, உள்மனதில் பாதுகாப்பு அற்ற உணர்வு ஏற்பட்டு, பாதித்தூக்கத்தில் எழுந்திருக்கலாம்.

கொஞ்சம் வளர்ந்த குழந்தை என்றால் - தூங்குவதற்கு முன் கதை சொல்லுங்கள். மெல்லிய இசை, பிரகாசமில்லாத விளக்கு வெளிச்சம், தாலாட்டுப் பாடுவது போன்றவைகள் தூக்கத்திற்கு உத்தரவாதம் என்றே கூறலாம்.

# பால் ரீதியாகப் பெண்களை ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது

அண்மையில் இலங்கை சட்ட உதவி மன்றத்தினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, சட்ட ஆலோசனைகள் எனும் விடயம் சம்பந்தமாக - யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்ததரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. அதிலே கருத்துரை வழங்கிய அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமினுடைய கருத்துகளிலிருந்து தொகுக்கப்பட்ட விடயங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றது.....

மனித உரிமைகள் என்பதற்குச் சுருக்கமான முறையிலே, விளக்கம் கொடுப்பதாக இருந்தால், மனிதன் மனிதனாக வாழத்தக்க வகையிலான கௌரவத்தை வழங்குதலே என்பதாகும். மனித உரிமைகள் மிகவும் குறுகியவை. உணவு, உடை, உறையுள் என அன்று இருந்த உரிமைகள், இன்று பலவாக அதிகரித்துள்ளன. ஒரு கட்டத்தில் ஒரு மனிதனுக்குரிய உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும். இது மறுக்கப்படும் காரணத்தினாலேயே இனறு உலகளாவியரீதியிலே மனித உரிமைகள் எனும் விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்படுகிறது.

மனித உரிமைகள்முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும், ஒரு சில பாகுபாட்டு காரணிகளின் ரீதியிலே, அவை ஒரு சமூகத்திற்கு அதிகமாக வழங்கப்படுகிறது. இல்லாவிடின் அறவே மறுக்கப்படுகிறது. இந்த பாகுகளே அதிகமாவுள்ளன. மிக முக்கியமான விடயமாகச் சீதனப் பிரச்சினையைக் குறிப்பிடமுடியும். இந்த விடயம் பல பெண்களுடைய வாழ்வைப் பெரிதும் பாதித்துள்ளன.

இவற்றைவிட, ஒரு பெண் எதிர்நோக்கும் முக்கியமான இடர்பாடு-பாலியல்ரீதியான துன்புறுத்தல் என்பதாகும். அதாவது, ஒரு பெண் சமூகத்தில் உள்ளவர்களால், வேலை செய்யும் இடத்தில் மேலதிகாரிகளால், ஏன் சொந்த தந்தையினாலேயே சிலவேளைகளில் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள்.

ஒரு பெண்குழந்தை பிறந்து, ஒரு வயதிலிருந்து அவள் இறக்குவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட வழக்குகள்கூட எமது நீதிமன்றங்களிலே 'காணப்படுகின்றன.

இவற்றைவிட இன்று போரினால் கணவனை இழந்த மனைவிமார் என விதவைப் பெண்களும், பிள்ளைகளை இழந்த தாய்மார்களும், சகோதரர்களை இழந்த பெண்களும் எனப் பலவகையான பெண்கள் எமது சமுதாயத்திலே உள்ளார்கள்

இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்புதான், மனித உரிமைகள் எனும் விடயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் பின்புதான், ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. அதனுடைய பொதுச்சபை - ஐக்கியநாடுகள் பட்டயம் ஒன்றைத் தயாரித்தது. இதிலே தான் மனித உரிமைகள் என்ற விடயம் முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்கப்பட்டது. அதிலும் குறிப்பாகப் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான மனித உரிமைகள் விடயங்கள் அதிக கவனத்திற்கொள்ளப்பட்டன. ஆனாலும், இதில் குறிப்பிட்ட பெண்கள தொடர்பான விடயங்கள்கூட, அவர்களுக்கு அதிக உரிமைகளைப் பெற்றுத்தரவில்லை. வெறும் கருத்துச் சுதந்திரம் மட்டும்தான் கிடைத்தது. இதன்பின்பு, 1948 ஆம் ஆண்டு சர்வதேச மனித உரிமைகள் ஆவணம் என்பது உருவாக்கப்பட்டு, பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த ஆவணத்தில் இலங்கை உட்பட்ட பல நாடுகள் கைச்சாத்திட்டுள்ளன. இந்த ஆவணத்தின் முன்னுரையிலே இந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் - எந்தவித வேறுபாடுமின்றி அனைவரையும் சென்றடையவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதில் ஆண் - பெண் எனும் பால்ரீதியான பாகுபாடு பார்க்கக்கூடாது என்பதே இதனுடைய முக்கியகருத்தாகும்.

இதில் குறிப்பாக ஒரு விடயம் காணப்படுகிறது. அதனுடைய குறிப்புரை 25 இல் - தாய்மை நிலையும், பிள்ளை நிலையும், விசேடமாக கவனிப்பிற்கும், பாதுகாப்பிற்கும் உரியவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கையினுடைய அரசியல் அமைப்பின் உறுப்புறுரை 12 இல் குறிப்பிட்ட விடயம் - ஆணும், பெண்ணும் சமமனாவர்கள். அவர்களிடையே ஓரங்காட்டப்படக்கூடாது. ஆணுக்குரிய அனைத்து உரிமைகளும் பெண்ணுக்கும் உண்டு. பால், [illegible]ம், மொழி, நிலம், இனம் சம்பந்தமாக ஒருவரை இன்னொருவரிடம் இருந்து வேறுபடுத்தக்கூடாது என்பதாகும்.

இந்த உறுப்புரிமையிலே குறிப்பிடுள்ள விடயங்கள் சரியான முறையிலே கடைப்பிடிக்கப்படாவிட்டால், அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குத்தாக்கல் செய்ய முடியும்.

இந்த அரசியல் யாப்பிலே குறிப்பிட்டுள்ள மற்றுமொரு முக்கியமான விடயம் - பெண்களுக்கு அதிகமான சலுகைகள், உரிமைகள் வழங்குவதை, சமவுரிமை எனும் நோக்கில் இந்த யாப்பு தடைசெய்வதாகக் கருதக்கூடாது என்பதாகும்.

சர்வதேச பெண்கள் பட்டயம் என்னும் ஒரு ஆவணமும் உள்ளது. இதனை அடியொற்றி இலங்கை பெண்கள் பட்டயம் எனும் ஆவணத்தை, இலங்கை அரசு தயாரித்துள்ளமை குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயமாகும். இது 1990 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இதில் ஏழு விடயங்கள் மகளிருக்கான உரிமைகளாக உத்தரவாதம் இடப்பட்டுள்ளன.

முதலாவதாக குறிப்பிடுவதாக இருந்தால் - அரசியல் - சிவில் உரிமைகள் பெண்களுக்குப் எதுவித பாரபட்சமுமின்றி வழங்கப்படவேண்டும். பெண்ணுக்கு அவளது குடும்பத்திலேயுள்ள உரிமைகள் சரியானமுறையிலே வழங்கப்படவேண்டும் என்பது - இரண்டாவது விடயமாகும்.

அடுத்ததாக - கல்வி தொழிற் பயிற்சிகளை வழங்கும்போது, ஆண்களுக்குச்சமமாகப் பெண்களுக்கும் வாய்ப்பு வழங்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. உயர் பதவிகள்கூட தராதரமுள்ள வேலையில் பெண்ணுக்குப் எதுவித பாரபட்சமுமின்றி வழங்கவேண்டும்.

நான்காவது விடயம் - நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளில் பெண்கள் பங்குகொள்ளும் உரிமை தொடர்பாக குறிப்படுகின்றது. இது தான் பெண்கள் வேலைக்கு செல்வது சரியா? தவறா? என்பதற்கு விடை பகர்கிறது.

பெண்கள் பொருளாதார நடவடிககைகளிலே பதவிபெற வேண்டுமாகவிருந்தால், அவர்கள் நிச்சயமாக வேலைக்குச் செல்லவேண்டும் என்பதை அந்த பட்டயத்தின் சரத்தின்மூலம் வலியுறுத்தும் விடயமாகும். இவற்றோடு, சமூக ரீதியாகப் பாராபட்சமின்றி பெண்கள் நடத்தப்படுகின்ற உரிமை, அதாவது ஒரு ஆணுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும், வசதி வாய்ப்புக்களும் அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

அடுத்த மிக முக்கியமான விடயம் - பாலியல்ரீதியான துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை சம்மந்தமான விடயமே, இன்று முக்கியமாக ஆராயப்பட வேண்டிய தேவையுள்ளது.

அதேவேளை, பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளில் ஏதாவது ஒன்று தனக்கு வழங்கப்படவில்லை என இலங்கைப் பெண் ஒருவர் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியுமா? என ஆராயவேண்டியுள்ளது. இது தொடர்பாகக் கூறுவதாக இருந்தால், இந்த பட்டயம் இலங்கை அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், இலங்கையில் இதுவரை இது சட்டமாக்கப்படவில்லை என்பதை முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். இலங்கையில் இப்பட்டயம் சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படாத காரணத்தினால், இதில் உறுப்புரிமைகளைக் கவனத்தில் கொண்டு, நாம் நீதிமன்றம் செல்லமுடியாத நிலையே உள்ளது.

இவ்வாறிருக்க, இந்தப் பட்டயத்தின் வலிமை என்ன என்ற ஒரு கேள்வி எழுகின்றது. இது நியாயமானதும் கூட. இதன்மூலம் சட்டவாக்கத் துறையில் ஒரு தொடர்ச்சியான அழுத்தத்தைக் கொடுக்கமுடியும்.

(தொடரும்...)

## தொகுப்பு ~ இ.சர்வேஸ்

பாட்டில் குறிப்பாக - பெண்கள், சிறுவர்கள் எனும் இரு விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியதேவை இன்று உள்ளது.

பெண்களுடைய விடயம் தொடர்பாக, முக்கிய கவனம் செலுத்தப்படுவதற்குக் காரணம்- அவள் இந்த உலகத்திலே பெண்ணாகப் பிறந்த ஒரு காரணத்திற்காக, அவளுக்குச் சராசரி ஆணுக்கு வழங்கப்படும் சுதந்திரம், சில கௌரவங்கள், தராதரங்கள என்பன மறுக்கப்படுகின்ற நிலையாகும். இதனை சட்டரீதியாக, பாலியல்ரீதியாக வேறுபடுத்தல் எனக் குறிப்பிடுவார்கள். பேச்சு வழக்கிலே சொன்னால் ஓரங்கட்டுதல் எனக்கூறமுடியும்.

இந்த ஓரங்கட்டுதல் எனும் நிலை. அடியோடு ஒழிக்கப்படுமாக இருந்தால், பெண்ணுரிமை பற்றிப் பேசவேண்டிய அவசியமே ஒருபோதும் ஏற்பட மாட்டாது. ஓரங்கட்டாமைகூட மனித உரிமைகளிலே பிரதானமான தொன்றாக, ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுவாக, ஒரு பெண் எவ்வெவ் விடயங்களிலே ஓரங்காட்டப்படுகிறாள் என்பதைச் சுருக்கமாக ஆராய்ந்தால். முதலாவதாகப் பிறப்பைக் குறிப்பிடமுடியும். பிறப்பு எனும்போது, இன்று பல பெற்றோர்கள் - பெண் குழந்தைகள் பிறப்பதையே விரும்பவில்லை. அறிவியல் ரீதியாக இதனை ஏலவே அறிந்துகொணடு, தாயின் கருப்பையிலே வளரும் கரு - பெண்ணாக இருந்தால், அதனை முளையிலேயே கருக்கி விடுகிறார்கள்.

இதனிலும் மேலாகக் குழந்தைகள் பிறந்த பின்பு, அது பெண் குழந்தையாக இருந்தால், பெற்ற தாயே குழந்தையை நெரித்துக் கொன்ற சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இப்படியாகப் பெண்களுக்குரிய உரிமைகள் பிறப்பிலேயே நசுக்கப்படுகிறது. சட்டத்தின் பிரகாரம் கருவிலே வளரும் குழந்தை - மூன்றுமாதங்களை அடைந்ததும், அதற்கும் உரிமைகள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, தன்னுடைய பிறப்புரிமையைத் தாய் மறந்துவிட்டதாக வாதாடக்கூடிய உரிமை அந்த கருவிற்கு உள்ளது. இது பலருக்குத் தெரியாதுள்ளது.

இரண்டாவது விடயமாகக் கலவியைக் குறிப்பிடமுடியும். ஒரு ஆண்பிள்ளைக்கு நல்லமுறையிலே கல்வி புகட்டி, அவனை உயர்த்த வேண்டுமெனப் பெற்றோருக்குள்ள ஆர்வம், பெண் பிள்ளைகளினுடைய விடயத்திலே குறைவாவேயுள்ளது.

எமது தமிழர்களுடைய கலாசாரததைப் பொறுத்தவரையிலே, பெண்களுக்குப் பல கட்டுப்பாடுகள் உள்ளன. சட்டத்தினால் அவளுக்கு வழங்கப்படும் கட்டுப்பாடுகளைவிட, சமூகத்தினால் அவளுக்கு வழங்கப்படும் கட்டுப்பாடு

# அழகும் ஆரோக்கியமும் தரும் சத்துணவு




(சென்றவாரத் தொடர்ச்சி..)

விற்றமின் A சத்தின் பயன்கள் தோல் மிருதுவாகக் காணப்படும். முகப்பரு தோன்றிய அடையாளங்கள் சீராக்கப்படுவதுடன், பருக்கள் உருவாகுவதும் தவிர்க்கப்படுகின்றது. அதிகஎண்ணெய்த் தன்மையாகக் காணப்படும் தலைமுடி, தோல் என்பவற்றை சீர்செய்கின்றது.

விற்றமின் A சத்தினைப் பெறக்கூடிய உணவுப் பொருட்களாக பச்சை, மஞ்சள் காய்கறிகள் (கோவா, கரட்) முட்டை, மீனின் ஈரல் (மீன் எண்ணெய்), முழுத்தானியங்கள், பழவகை, தினை என்பவற்றிலிருந்து பெறமுடிகின்றது.

**விற்றமின் B தொகுதி**

மருந்து வகை, சூழல் மாசுபடுதல், மதுபானம் உட்கொள்ளல், மனஅழுத்தம், மன, உடல்களைப்பு, அதிக சீனி என்பற்றால் ஏற்படும் பாதிப்புக்களுக்கு, விற்றமின் B தொகுதியை உபயோகப்படுத்துவதால், சீர்செய்யப்படுகின்றன.



**விற்றமின் B தொகுதி**

**குறைபாடு**

சமிபாடின்மை, மன அழுத்தம், தூக்கமின்மை, தலைமுடி உதிர்தல், தோல் வருத்தம், குருதிச்சோகை, மலச்சிக்கல், முகப்பருக்கள், இளநரை என்பவற்றைத் தோற்றுவிக்கும்.

**பெறக்கூடிய வழி**

பச்சை, மஞ்சள் காய்கறிகள் (கோவா, கரட்), முட்டை, மீனின் ஈரல் (மீன்எண்ணெய்),

**விற்றமின் B 1**

இதயத்திற்குப் பலத்தை வழங்கும். களைப்பை நீக்கும், மன அழுத்தம், மதுபானப் பழக்கத்திலிருந்து விடுபடல் ஆகியவற்றுக்கு நல்ல பலனைத்தரும். இளவயதிலேயே முதிர்ந்த தோற்றத்தைப் பெறுவதையும் தடுக்கின்றது.

**விற்றமின் B 2** (காபோவைதரேற்று)

மாப்பொருள், கொழுப்பு, புரத மூலக்கூறுகளை ஆக்க உதவும். கலச்சுவாசம், இழையச் சீராக்கத்திற்கும், கூந்தல் ஆரோக்கியம், தோல், நகம் என்பவற்றின் ஆரோக்கியத்திற்கும் உதவும்.

இதன் குறைபாட்டினால் எண்ணெய்த் தோல் தோன்றல், வாயோரங்களில் வெடிப்பு, உலர் தன்மை தோன்றல், மூக்கின் அருகாமையில் சிறுசிறு படைகள் / செதில்கள்போல் காணப்படல், முடி உதிர்தல், கண்கள் கடித்தல் போன்ற உணர்விருத்தல், வெளிச்சத்தைப் பார்க்க முடியாதிருத்தல் போன்ற பிரச்சினைகள் உருவாகும்.

**விற்றமின் B 3**

கொழுப்பு, புரத மூலக்கூறுகளை ஆக்க உதவும். மூளையின் சீரான இயக்கம், குருதிச்சுற்றோட்டத்தினைச் சீராக்குதல் என்பவற்றிற்கு உதவும். (**Schizophrenia** போன்ற மூளைக் குறைபாடுகளுக்கு **B 3** கூடியளவில் பயன்படுத்தப்படுவதுண்டு).

இதன் குறைபாட்டினால் - வாயில் துர்மணம் தோன்றல், சமிபாட்டுக் கோளாறுகள், களைப்பு, தோல் வியாதிகள் போன்றன ஏற்படும்.

**விற்றமின் B 5**

மருந்துகள் உட்கொள்ளுவதனால் அதிகரித்துக் காணப்படும் தொட்சின்களையும், மன அழுத்தத்தையும் தாங்கும் வல்லமையை உடலுக்குக் கொடுக்கிறது.

கதிரியக்கத்தால் ஏற்படும் தாக்கத்தையும் தடுக்கவுதவும். முகச் சுருக்கம் தோன்றுவதைத் தடுக்கும்.

**விற்றமின் B 6**

கொலாஜின், இலாஸ்டின் நார்களின் உருவாக்கத்திற்கும், **DNA**, **RNA** என்பவற்றிற்கும் உதவும். தசை விரிவினால்/ இழுபட்டது போன்ற அடையாளங்கள் - **B 6** என்பவற்றின் குறைபாட்டினாலேயே ஏற்படுகிறது. பல வகையான அழகுப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது. உதாரணமாக- முகப்பரு, பொடுகு, முடி மெல்லியதாகக் காணப்படல், வாயைச் சுற்றிச் சுருக்கம் தோன்றல் என்பவற்றிலிருந்து விடுதலை பெற உதவும்.

**விற்றமின் B 12**

இளவயதிலேயே முதிர்ந்த தோற்றம் தோன்றுவதைத் தடுக்கும். செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் உருவாக்கத்திலும் பங்கெடுக்கும்.

**விற்றமின் C**

முகத்தில் சுருக்கங்களேற்படல், சூழல் மாசினாலேற்படும் பாதிப்புகள், தடிமன், இதயக்கோளாறு, வீங்கிக் காணப்படும் மூட்டுகள் என்பவற்றின் சீராக்கலுக்கு அவசியமாகும். தொட்சின்களை அகற்றும் வல்லமை கொண்டது. ஆஸ்துமா, எரிவுகள், எரிகாயங்கள், பருக்கள் என்பவற்றைத் தீர்க்க உதவும். அனைத்தையும்விட இது **anti oxidant** ஆகும்.

**விற்றமின் E**

இதுவும் ஓர் **anti - oxidant** ஆகும்.

கலச்சுவாசம், புதிய கலங்கள் உருவாக்கப்படல். அதிரினல், பிட்யுடரி ஆகிய ஜனனத்தொகுதியுடன் தொடர்புடைய ஓமோன்களின் சுரப்பிற்கும் காரணமாக அமையும். வெரிக்கோஸ் வெயின் (**Varicose veins**), உலர் சருமத்தால் ஏற்படும் கடித்தலுணர்வு என்பவற்றிலிருந்தும் நிவாரணமளிக்கும்.

**பெறும்வழிகள்**

முழுத்தானியங்கள், வித்துக்கள், தாவரக் கொழுப்பு, கீரைவகை, தினை ஆகிய உணவுப்பொருட்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்
-திருக்குறள்.

## நமது நோக்கு

# வல்லாதிக்க தலையீடுகளும்; சிறிலங்காவின் எதிர்காலமும்..

பொருளாதாரம் மற்றும் இராணுவ ரீதியில் வலிமைகொண்ட வல்லாதிக்க மனோபாவம் மிக்க நாடுகள், தமது பிராயந்தியத்தையும் அதனைச் சூழவுள்ள ஏனைய பகுதிகளையும் சேர்ந்த வலிமை குன்றிய பொருளாதார வலுவற்ற, உட்பிரச்சினைகள் அதிகமான நாடுகளின் மீதான ஆதிக்கத்தை அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியிலான தொலைநோக்கு மூலோபாயங்களின் அடிப்படையில் மேம்படுத்தி, அவற்றைத் தமது மறைமுக அழுத்தக்கட்டுப்பாடுகளின் கீழ்க்கொண்டுவர எத்தனிப்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

இது ஒருவகையான நாகரிகமான ஆக்கிரமிப்பு சிந்தனையின் வெளிப்பாடென்றே கூறவேண்டும்.

ஜனநாயகம், மனித உரிமைகள், தேசியத் தனித்துவம், இனத்தனித்துவம், இனங்களின் சுயநிர்ணய உரிமை போன்றவை பற்றியெல்லாம் மிகுந்த பொறுப்புணர்வுடன் சிந்தித்துப் பேசுவதாகக் கூறப்படும் - அனைத்து உலகின் பாரிய ஜனநாயக நாடுகளும், மேற்குறிப்பிட்ட ஜனநாயக விரோத செயற்பாட்டைப் பகிரங்கமாக, கடுமையாகக் கண்டித்த வண்ணம்-மறைமுகமாக அதே செயற்பாட்டைத் தத்தம் புவிசார் அரசியல் அபிலாஷைகளுக்கேற்பச் செய்துகொண்டே இருப்பது தான் சர்வதேசத் துயரமாகும். தத்தம் சுயசெயற்பாடுகள் குறித்து, மௌனம் காத்து அல்லது அவற்றை நியாயப்படுத்தி, தமது நடவடிக்கைகளுக்குள்ளாகும் வலிமைகுன்றிய நாடுகள் மற்றும் இனங்கள் மீது அவற்றின் நியாயத்தன்மையை நிராகரித்த வண்ணம் குற்றஞ்சுமத்தி - கண்டனம் தெரிவித்து, சர்வதேச சமூகத்தின் அந்த நாடுகள் மற்றும் இனங்கள் மீதான நல்லபிப்பிராயத்தை மாற்றுவதென்பதும் கூட, ஒரு ஜனநாயக மரபாக, வல்லாதிக்க நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகவேயுள்ளது.

இதனை அந்த நாடுகள் மறுத்தாலும்கூட, இதுவே இன்றைய சர்வதேச அரசியல் யதார்த்தமாகும்.

உலகின் பல்வேறு நாடுகளில் நடைபெற்றுவரும், ஒடுக்கப்பட்டு, அடக்கப்படும் மக்களின் உரிமைப் போராட்டங்கள் அனைத்திற்குள்ளும், இத்தகைய பிரச்சினைகள் நடக்கும்-பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்திகள் ஊடுருவி, அவற்றைத் தமது புவிசார் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப- இராஜதந்திர ரீதியில் நெறிப்படுத்தி, குழம்பிய குட்டையில் மீன்பிடித்துக் குதூகலிக்கும் செயற்பாட்டையே மேற்கொண்டு வந்துள்ளமையானது, வெளிப்படையான விடயமேயாகும். இவர்களின் இந்த அணுமுறைகளின் ஆக்கிரமிப்புத் தன்மையானது, பாதிக்கப்பட்ட நாடுகளை அல்லது இனங்களை மேலும் மோசமாகப் பாதிக்கப்படவைத்தே வந்துள்ளது.

இதற்கு உலக வரலாற்றில் ஏராளமான உதாரணங்கள் உண்டு. ஆனாலும், பாதிக்கப்பட்டவர்களின் பக்க நியாயங்களை எழுச்சிகொள்ள எவருமே அனுமதித்ததுமில்லை.

சிறிலங்கா இனப்பிரச்சினைக்குள் - தலையையோ, மூக்கையோ நுழைத்து நியாயம் பேசவந்த - வருகின்ற நாடுகளின் அணுகுமுறைகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

பிராந்திய வல்லரசு இந்தியா முதல், உலக வல்லரசு அமெரிக்காவரை - தமது தேசிய அபிலாஷைகளின் அடிப்படையிலேயே, சிறிலங்காவின் தேசியப் பிரச்சினையான இனவிவகாரத்தைக் கையாள விரும்புகின்றனர் என்பதுதான் உண்மையாகும்.

இன்றைய சமாதான நகர்வுகளின் இழுபறிநிலைக்கும், சர்வதேச வல்லாதிக்க சக்திகளின் மறைமுக அரசியல் சதுரங்கக்காய் நகர்த்தல்களே மூலகாரணமாகும்.

இந்தக் காய்நகர்த்தல்களில் - பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே தொடர்ந்தும், வேறுவேறு வடிவங்களில் பாதிக்கப் படுபவர்களாக வருகின்றனர்.

அமெரிக்காவின் அணுகுமுறை நோக்கம் ஒன்றென்றால், இந்தியாவின் கண்ணோட்டம் வேறொன்றாக இருக்கும். இரு தரப்புக்குமிடையே அல்லாடும் சிறிலங்காவின் ஆளும் - எதிர்க் கட்சிகளின் திட்டம் மற்றொன்றாக இருக்கும்.

இதுதான் அனைத்துக் கோளாறுகளுக்கும் காரணமாகும்.

இப்போது இந்திய வெளிவிவகார அமைச்சர், கொழும்புக்கு வருகைதந்துள்ளார். வழமைபோல் கொழும்பில் தமிழ்க்கட்சிகளும், குழுக்களும் அவரைச் சந்தித்து - இனநெருக்கடி விவகாரத்தில், இந்தியா புதிய நிலைப்பாட்டை எடுக்கவேண்டுமென்று கூறியுள்ளன. பதிலுக்கு அவரும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டில், இந்தியாவுக்கு அக்கறையுண்டு என்று வழமைபோல் சம்பிரதாய வார்த்தைகளைக் கூறியுமுள்ளார்.

இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டையும், இந்தியாவின் பிராந்திய அபிலாஷையையும் மட்டுமே, இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்வதன்மூலம், இந்தியாவைப் பாதுகாக்க விரும்புகிறது என்பதையே, இந்திய வெளியுறவு அமைச்சரின் கூற்று வெளிப்படுத்துவதாகவுள்ளது.

உண்மையில் - அமெரிக்காவோ, இந்தியாவோ ஆத்மசுத்தியுடன், அரசியல் உள்நோக்கங்கள் ஏதுமின்றி - நியாயபூர்வமான முறையில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலுவார்களேயானால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது சுலபமான விடயமாகிவிடும்.

ஆனால், அவர்களின் ஆசியப் பிராந்தியம் மீதான அரசியல் மற்றும் இராணுவரீதியிலான ஆதிக்க அபிலாஷைகள், அவர்களை அதற்கு அனுமதிக்கப்போவது கிடையாது.

சிறிலங்காவின் தலையெழுத்தை எழுதும் பொறுப்பை, ஆளும்கட்சி ரணிலிடமும், எதிர்க்கட்சி இந்தியாவிடமும் கொடுத்துவிட்டு - சமாதானம் என்பதைச் சாத்தியமற்ற விடயமாக்கிவிட்டு, முரண்பாட்டு அரசியலில் தமக்குள் முட்டி மோதிக்கொள்கின்றன.

இவர்கள் அனைவரும் இணைந்து இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பார்களோ இல்லையோ... சிறிலங்காவுக்கு ஒரு முடிவு கட்டுவார்கள் என்பது சர்வநிச்சயமாகும்.

## நாடும் நடப்பும்




# புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தி இராணுவம் தம்மைப் பலப்படுத்துகிறது

## மன்னார் பொங்குதமிழ் நிகழ்வில் அமிர்தாப்

இராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்தித் தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ முகாம்களைத் தமிழர் தாயகத்தில் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

இவ்வாறு - விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப், மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற பொங்குதமிழ் நிகழ்வில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

தமிழர்களின் பலத்தையும், ஒருமித்த உணர்வையும் ஆட்சியாளர்களுக்கும், சர்வதேசத்திற்கும் புரியவைத்த நிகழ்வாகப் பொங்குதமிழ் நிகழ்வு அமைந்துள்ளது. இந்த நிகழ்வு - தமிழினத்தை ஒரு தேசியத் தலைமையின் கீழ் உள்ளடக்கி, ஒருமித்த கருத்துக்களை ஒரேகுரலில் வெளிப்படுத்தியிருக்கின்றது. தமிழர்களின் அரசியல் வாழ்வில் இந்த நிகழ்வானது முக்கிய அத்தியாயமாகக் காணப்படுகின்றது.

பொதுமக்கள் வாழ்விடங்கள், வணக்கத்தலங்கள், பாடசாலைகள், பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட்டு, மக்களின் இயல்புவாழ்வு தோற்றுவிக்கப்படும் என்றே கூறப்பட்டது. ஆனால், அவ்வாறு இதுவரை செய்யப்படவில்லை. இராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகின்றது. இதைச் சர்வதேச சமுகம் புரிந்துகொள்ளவேண்டும்.

எமது நிலத்தை இராணுவம் ஆக்கிரமித்து நிற்கின்றது. எமது நிலம் எமக்கு வேண்டும். நாம் எங்கள் வீட்டுக்குப் போக, நீங்கள் உங்கள் வீட்டுக்குப் போங்கள் என்று நீங்கள் கோருவதும், கோஷமிடுவதும் நியாயமானதே.

இந்த மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து, ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை விலகச் சொல்வது அரசாங்கத்தின் கடமையாகும். தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த - போரினால் அழிக்கப்பட்டு வந்த மக்களின் வாழ்வியற் கட்டுமானங்களை மீள அமைத்துக் கொள்வதற்குச் சர்வதேசம் உதவிகளை வழங்கியது. இந்த உதவிகளைப் பெற்றுப் பயன்பெற முடியாதநிலையில், எமது மக்கள் உள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கவுள்ள இடைக்காலத் திட்டவரைபை அரசு ஏற்றுக்கொண்டு - அதற்கு மதிப்பளித்து நடைமுறைப்படுத்துமேயானால், எல்லா இனமக்களும் சமத்துவமாக வாழவழியுண்டாகும்.

இதனைச் சிங்கள ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டு செயற்படுத்த விரும்பாத வேளையில், எதிர்காலத்தில் இதற்காக வெட்கப்பட வேண்டியநிலை அரசுக்கு ஏற்படும் என்பதை இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஒன்றுபட்ட தமிழர்களின் தீர்மானமே தமிழர்களின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் சக்தியாகும். மண்மீது மக்கள் கொண்டுள்ள உறுதிமிக்க பற்று - தேசியத் தலைவர் மீது கொண்டுள்ள அதீதநம்பிக்கை, இவையாவும் எமக்கு விரைவான விடுதலையைப் பெற்றுத்தரும். நாம் எல்லோரும் ஒரே தேசியத்தின் கீழ் நிற்போம். உறுதியாக உழைப்போம்.

இவ்வாறு மேலும் அவர் குறிப்பிட்டார்.



நேற்றுமுன்தினம் கொழும்பு கடற்கரையில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய 60 அடி நீளமான திமிங்கிலத்தை படத்தில் காணலாம்.

# வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு பேராளர் சங்கமம்

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவுப் பேராளர்களின் சங்கம நிகழ்வு, நாளை காலை 9.30 மணிக்கு - கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில், வடக்கு - கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளருமாகிய இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் கூட்டுறவுப் பேராளர்கள் 800 இற்கும் மேற்பட்டவர்கள் ஒன்றாக கிளிநொச்சியில் சந்திக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்தச் சங்கம நிகழ்வில் கலந்துகொள்ள - அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலையைச் சேர்ந்த சுமார் 300 இற்கு மேற்பட்ட கிழக்கு மாகாண கூட்டுறவுப் பேராளர்கள், இன்று மாலையே கிளிநொச்சி வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சங்கம நிகழ்வில் - கலை நிகழ்வுகளும், போட்டிகளில் பரிசு பெற்றோரின் உரைகளும், கூட்டுறவாளர்கள் உரைகளும், சிறப்புரைகளும் இடம்பெறும்.

# யாழ்ப்பாணத்தில் படையினரின் விபத்துக்கள் புலிகளை சண்டைக்கு இழுக்கும் முயற்சி!

## விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் அடிக்கடி நிகழும் ராணுவ வாகன விபத்துக்கள், புலிகளைச் சண்டைக்கு இழுக்கும் முயற்சியோ என, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது- யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் ராணுவ வாகன விபத்துக்களை படையதிகாரிகள் கவனத்தில் கொள்ளாது செயற்படுகின்றனர். அத்துடன், இச்சம்பவங்களை அறிவிக்க ஈடுபடும் ஊடகவியலாளர்களும் தாக்கப்படுகின்றனர்.

கடந்த இரண்டு வாரங்களாக - யாழ்ப்பாண மாவட்டத்தில் ராணுவ வண்டியால் மோதப்பட்டு, சிலர் இறந்துள்ளனர். பலர் காயப்பட்டுள்ளனர். இதைத் தடுத்து நிறுத்தப் படையதிகாரிகள் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இந்தச் சம்பவங்களில் பொதுமக்கள் ராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். இப்படியான மிலேச்சத்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவை தற்போதைய சமாதான முயற்சிக்கு பங்கம் ஏற்படுத்தும் என்பதால், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்த வார பலன்கள்

## 17.10.2003 ~23.10.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சந் சனி |
| செவ் யுரே | 17 இ.11.03 துல - சூரி<br>18 மா 4.58 கட-சந்<br>20 இ. 1.08 சிங்-சந்<br>20 பி.இ. 2.38 துல-புத<br>22 பி.இ 5.17 கன்-சந் | | |
| நெப் | | | குரு |
| | | சுக் கேது | சூ புத |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்குப் பல நற்பலன்கள் எதிர்பார்த்திருக்கின்றன. தொழில் விருத்தியும், வருவாயும் சிறப்பாக இருக்கும். உடல்நிலை உற்சாகமாகத் தொழிற்படும். குடும்பத்தில் ஆரோக்கியமும், குதூகலமும் காணப்படும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணத்தை எதிர் நோக்குவோர் கருமம் கைகூடப் பெற்று, மகிழ்ச்சியாக வாழ்க்கையை ஆரம்பிப்பர். மணவாழ்க்கையும் நினைத்தவாறு அமையும். உத்தியோகத்தினருக்கு விரும்பியவாறு கருமங்களை ஆற்றக்கூடியதாக இருக்கும். புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்ப்போருக்கும் நன்று. வியாபாரிகளுக்கும் தொழில் இலாபகரமாக நடக்கும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியும், முன்னேற்றமும், சித்திகளும் உண்டு.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குத் தொழில் மத்திம பலனையே தரும். தொடங்குங்கருமங்கள் எதிர் பார்த்த பலனைத்தராது. நிம்மதிக் குறைவு காணப்படும். இடையிடையே வைத்தியச்செலவுகளும் ஏற்படலாகும். குடும்பசுகம் நன்றாக இருக்கும். கருத்து வேறுமைகளுக்கு இடமுண்டு. வெளியிலிருந்து உதவிகள் கிடையாது. அயலவர்கள் பகைமை சாதிப்பர். திருமண விடயங்கள் காலதாமத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தர்கள் வேலைப்பளு காரணமாக ஏனையோரைச் சினந்து கொள்வார். தமது எண்ணப்படி கருமத்தை ஆற்றமுடியாமையால் வெறுப்புக்காளாவர். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் கல்வியில் அக்கறை குறைந்து காணப்படுவர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



இந்த இராசியினருக்கு இந்தவாரம் மகிழ்ச்சியாகக் கழியும். தொழில் முன்னேற்றமும், வருவாயும் நன்றாக அமையும். பலராலும் மதிக்கப்படுவர். செய்தொழில்கள் நல்ல பலனைத்தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனசன பந்துக்கள், பிள்ளைகள் ஆகியோரின் வருகையால் மனச்சந்தோஷமடைவர். கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் இருப்பின் அவை தீரும். திருமண முயற்சிகளில் ஊக்கமும், முன்னேற்றமும் காணப்படும். உத்தியோகம் புரிவோர் செவ்வனே கருமமாற்றி முகாமையாளரின் மதிப்பைப் பெறுவர். வியாபாரிகளுக்குத் தேங்கியிருந்த முதலீடுகள் விற்பனையாகும். மாணவர்கள் ஊக்கமுடன் செயற்பட்டு ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெறுவர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



இவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்கள் ஏற்படும். தொழில்கள் தாமதமாகி நிறைவேறும். வருவாயிலும் பார்க்கச் செலவுகள் கூடிக்கொண்டு போகும். குடும்பச் செலவுகளைக் குறைக்க எத்தனித்தாலும், நடைமுறைச் சாத்தியமில்லை. தேகசுகம், குடும்பசுகம் இடையிடையே பாதிப்படைவதால், வைத்தியச் செலவுகளும் தலைதூக்கும். பிரயாணத்தின்போது அவதானம் தேவை. திருமண முயற்சிகள் ஆமைவேகத்திலேயே செயற்படும். பிள்ளைகளால் உதவி உண்டு. அரசியற்துறையிலுள்ளோர் அவதானமாகக் கருத்துக்களை வெளியிடவேண்டும். வியாபாரிகள், விவசாயிகள் ஆகியோர் மத்திமபலனையே காண்பர். மாணவர்கள் முயற்சிக்கேற்ப நன்மையடைவார்கள்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம)*



சிங்கராசியில் பிறந்தவர்கள் தமது தொழில்களில் ஊக்கமுடையவராயும், நன்மதிப்பைப் பெறுபவராயும் இருப்பர். வாழ்க்கையில் உறுதியான தீர்மானங்களை எடுப்பர். தேகாரோக்கியம் பாதிப்படையாது. கொடுக்கல்வாங்கல் பிரச்சினை தராது. இனத்தவர்களால் உதவிகள் கிட்டும். வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளக் காத்திருப்போருக்குக் கருமம் கைகூடும். மணவாழ்க்கையும் கிடைக்க வாய்ப்புண்டு. உத்தியோகத்திலுள்ளோர் நல்ல மாற்றங்களையும், விரும்பியவாறு தொழில்முறையைக் கையாளக்கூடியதாகவும் இருக்கும். வியாபாரம் சம்பந்தப்பட்டோர் கூடிய பிரயாணங்களை மேற்கொள்வர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை)*



இந்த ராசியில் ஜனனமானவர்களுக்கு நிம்மதி குறைந்த வாரமாகத்தென்படுகிறது. தொழில்கள் நிறைவேறுவதில் தாமதம் காணப்படும். செலவுகள் அதிகமாகும். வேலையாட்களின் ஒத்துழைப்புக் கிடையாது. உடலாரோக்கியம் குன்றிக்காணப்படுவதால், வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். சோம்பல் தன்மை கூடுதலாகக். காணப்படும். கொடுக்கல் வாங்கல்களை அவதானமாகச் செய்யவும். பிணக்குகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளவும். திருமண விடயங்களும் தாமதமாகவே நகரும். வியாபாரிகளுக்குச் சரக்குகள் தேங்கிக் கிடக்கும். வாடிக்கையாளர் விலகிச் செல்வார்கள். புதுமுயற்சிகள் எதுவானாலும் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் ஊக்கமின்மையால் வெற்றிகளை இழப்பர்.

### துலாம்

*(சித்திரை 3,4 ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்குத் தொழில் வாய்ப்புகளும், வருவாயும் நன்றாக அமையும். புதிதாக வேலைதேடுவோருக்கும் கருமம் கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உழைப்புக்கேற்ப ஊதியம் கிடைக்கும். அயலவர்கள் உதவுவார்கள். தொடங்குங்கருமங்கள் விரைவில் அனுகூலமாகும். மனத்திடம் காணப்படும். உடல் நிலையிலும் புத்துணர்ச்சி தோன்றும். உத்தியோகத்துறையிலுள்ளோர் உற்சாகத்துடன் தொழிலாற்றுவார்கள். காதல் முயற்சிகள், திருமண நிகழ்வுகள் என்பன கைகூடும். வியாபாரிகளுக்கு நிறைந்த இலாபம் உண்டு. புதிய முதலீடுகளுக்கும் நன்று. மாணவர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு இந்த வாரம் பல நற்பலன்கள் ஏற்படலாகும். தொழில் முறையில் நல்ல வருமானம் கிட்டும். வங்கிநிலை சீராக இருக்கும். புது முயற்சிகளால் நல்ல இலாபம் உண்டு. தேகசுகம் பாதிப்படையாது. குடும்பத்தில் நல்லுறவும், மகிழ்ச்சியும் நிலவும். வெளிநாட்டு உறவினரின் வருகையால், வீடு கலகலப்பாக இருக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடக்கும். உற்சாகமும், புதுத்தென்பும் காணப்படும். இடையிடையே பிரயாணங்களும் ஏற்படலாம். பிள்ளைகளால் நன்மை உண்டாகும். உத்தியோகத்தர்கள் சிறப்பாகக் கருமமாற்றி, மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவர். தூரதேசப் பிரயாணங்களும் தடையின்றிக்கிட்டும். வியாபாரிகள் புதிய முதலீடுகளைச் செய்வதால், அதிக இலாபம் காண்பர். மாணவர்கள் முயற்சியினால், நல்ல முன்னேற்றமும், பாராட்டும் கிடைக்கப் பெறுவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



இவர்கள் தொழில் முன்னேற்றத்தையும், நல்ல வருவாயையும் பெறுவர். கொடுக்கல் வாங்கல்களிலிருந்த கஷ்டங்கள் நீங்கும். மனதில் உற்சாகமும், தன்னம்பிக்கையும் இருக்கும். தொடங்குங்கருமங்கள் விரைவில் இனிதாக அனுகூலமாகும். நண்பர்களின் உதவி உண்டு. தேகாரோக்கியம் கெடக்கூடிய நிலைமையில்லை. வருவாய் நன்கு இருப்பதால், குடும்பத்திலும் மகிழச்சி குறையாது. மணவாழ்க்கையை எதிர்நோக்குவோர் விரைவில் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். புதிதாக உத்தியோகத்தை விரும்பும் இளைஞர்களுக்கும் நற்செய்திகள்வரும். தொழில் அனுகூலம் உண்டு. வியாபாரிகள தமது முதலீடுகள் விற்பனையாக்கி, நல்ல வருமானம் பெறக் கூடியதாக இருக்கும். மாணவர்களும் பரீட்சையில் சித்தி, பாராட்டு என்பன பெறுவர்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசிக்காரருக்குப் பொதுவாக மத்திம பலன்களே காட்டுகிறது. தொழில்கள் முயற்சிக்கேற்ப இலாபம்தரும். தொடங்குங்கருமங்கள் தாமத்தின் பின் நிறைவு பெறும். தேக்சுகம் வெகுவாகப் பாதிக்கப்படாவிடினும், மருத்துவரை நாடிக்கொள்வது நன்று. பிரயாணங்களால் செலவுகள் உண்டாகும். குடும்பத்தில் சுமுகநிலை பாதிப்பாக்காது. மணவாழ்க்கையை எதிர்நோக்குவோருக்குக் கணிசமான அலைச்சல் இருக்கும். புதிதாக உத்தியோகம் தேடுவோரும் அங்கும் இங்குமாக அலையவேண்டியிருக்கும். வெளிநாடு செல்லவிருப்போருக்கும் கால தாமதம் காட்டும். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக இருக்கும். புடைவை வியாபாரம் செய்வோர் நல்ல இலாபம் பெறுவர். மாணவர்கள் கரிசனையுடன் இருந்தால், முன்னேற்றமடைவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



இவர்களுக்குச் செய்தொழில்கள் குறைந்த பலனையே தரும். வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாக இருக்கும். தேகசுகமும் சில சந்தர்ப்பங்களில் பாதிப்புக்குள்ளாகலாம். குடும்பத்தில் கருத்து வேற்றுமை, அமைதிக் குறைவு ஏற்படலாகும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். சில சந்தர்ப்பங்களில் ஏமாற்றடைய நேரிடலாம். வெளிநாட்டுப் பிரயாணத்தை எதிர்நோக்குவோர் வீண் அலைச்சலுக்கு உள்ளாகலாம். உத்தியோகத்திலுள்ளோர் வேலைப்பளு அதிகமாவதால், உற்சாகமிழந்து காணப்படுவர். வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடையாது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்கள் மொத்தத்தில் தோல்வியையே அடைவர்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவதி)*



இந்தராசிக்காரர் தொழிற்துறைகளில் முன்னேற்றம் காண்பர். வருவாய் அதிகரிக்கும். தொழில் புரியும் இடத்தில் சக தொழிலாளர்களின் உதவிகிட்டும். மனதில் துணிவும், நிதானமும் இருக்கும். தேகசுகமும், குடும்பசுகமும் நன்று. குடும்பத்தில் நற்கருமங்கள் நடைபெறும். குதூகலமும், மகிழ்ச்சியும் இருக்கும். உறவினர்கள், பிள்ளைகள் வருகை தருவார்கள். பொருட்செலவுகள் இருப்பினும் வருவாய் இருப்பதால், தாக்கம் தெரியாது. தூரதேசப் பிரயாணம் மேற்கொளவோருக்கு அனுகூலமான பலன் கிடைக்கும். திருமண வாழ்க்கையும் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வசதியான இடமாற்றங்கள், பாராட்டுக்கள் கிட்டும். வியாபாரிகளுக்கு சிரமமில்லாமலிருந்த சரக்குகள் விலைப்படும். பணம் சேரும். மாணவர்கள் தமது முயற்சியால் முன்னேற்றம் காண்பர்.

# கொடிது கொடிது வறுமை கொடிது

இன்று சர்வதேச வறுமை ஒழிப்பு தினமாகும். உலகம் என்னவோ வெகுவாக முன்னேறி விட்டாலும், இன்னும் சில நாடுகள் வறுமையின் கோரப்பிடிக்குள்ளே சிக்கித் தவித்துக் கொண்டேயுள்ளன. பட்டினிச்சாவுகள் நாளாந்தம் எங்காவது ஒரு மூலையிலே நிகழ்ந்த வண்ணம்தான் உள்ளன.

பாட்டுக்கொரு புலவன் பாடினான் "தனி ஒருவனுக்கு உணவில்லையேல், இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்றும், ஆயிரமாயிரம் கவிஞர்கள் வெஞ்சினம் கொண்டு கவிபாடினாலும், பஞ்சம் இன்னும் பறந்தபாடாய் இல்லை.

விண்ணுக்கு விண்வெளி ஓடங்கள் அனுப்பும் காலத்தில், மண்ணில் பலர் உண்ண உணவின்றி உயிரை விடுவது வேதனையின் [illegible] வேதனை. வறுமையின் கோரப்பிடிக்குள்ளே சிக்கித் தவிக்கும் நாடுகளாக - ஆபிரிக்க நாடுகள் சிலவற்றை குறிப்பிட்டுச் சொல்ல முடியும். எதியோப்பியா, சூடான் என்பவை இவற்றுள்ளே முக்கியமானவையாகும்.

இந்த நாடுகளிலே வாழும் மக்கள் - ஒரு வேளை உணவிற்காக படும்பாட்டை, ஊடகங்கள் பலவற்றில் வந்த படங்கள்மூலம் பலர் பார்த்திருப்பார்கள். இதேவேளை, தனது பொருளாதாரத்தை உலக சந்தையில் தளம்பாமல் பேண வேண்டும் என்பதற்காக, அமெரிக்கா - கோதுமை மாவைக் கடலிலே கொட்டும் செய்திகளையும் நாம் செவி வழி கேட்டிருக்கிறோம். என்ன உலகமடா இது. என ஆண்டவன் மீது பழியைச் சுமத்துவோம்.

வறுமையின் காரணமாக, நாளைய உலகின் வளமான சொத்துக்களாகிய சிறுவர்கள்கூட, முளையிலே கருகிவிடும் சம்பவங்களையும் கேள்விப்பட்டுள்ளோம். ஔவைக்கிழவி பாடினாள் "கொடிது கொடிது வறுமை கொடிது, அதனிலும் கொடிது இளமையில் வறுமை" எவ்வளவு அர்த்தம் நிறைந்த பாடல் எனப் பலராலும் அதிசயப்பட்டுள்ளோம்.

இளமையில் வறுமையை அனுபவித்தவர்களுக்குத்தான் வறுமையின் கொடுமையின் தன்மை புரியும். சிறுவர்கள் வேலை தேடி அலைகிறார்கள். இது தொடர்கதையாகிப்போய்விட்ட நிகழ்வு. இதனால், அவர்களது கல்வி பெறும் உரிமையையும் தொலைத்து, இருண்டதொரு உலகை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றிற்கும் காரணம் வறுமை! வறுமை! வறுமை!

ஆண்டுக்கொருமுறை வறுமை ஒழிப்புத்தினம் என நாம் அனுஷ்டிப்பதனால், உலகில் வறுமை ஓடிவிடமாட்டாது.

உள்ளத்துணர்வோடு ஒவ்வொரு மனிதனும் மற்றையவனுக்கு உதவி செய்து, அவன் பசிப்பிணியைப்போக்க முன்வரும்போதுதான் - வறுமையை ஓரளவிற்கேனும் ஒழிக்கமுடியும்.

வளர்ந்துவரும் நாகரிக மோகத்தில், அநியாயமாகச் செலவுசெய்யும் பணத்தில் - ஒரு சிறுதொகையாவது ஏழைகளின் இன்னல்களைப் போக்க நல்கும் சமுதாயம் ஒன்று என்று உருவாகிறதோ அன்று வறுமை முற்றாகவே ஒழியும்.

இன்று உலகின் பல நாடுகளிலும் - உள்நாட்டு போர்களும், சர்வதேச யுத்தங்களும் மலிந்து விட்டன. இதன் காரணங்களினால், அந்த நாடுகளின் பொருளாதார நிலமைகள் மிகவும் மோசமடைந்த நிலையிலே காணப்படுகிறது.

போருக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதிலே அரசுகள் காட்டிவரும் அக்கறையை, அந்த நாட்டு மக்களின் பசியை போக்க முன்வருவதில்லை என்பது வேறு விடயம்.

போரின் விளைவால் - தாயை இழந்து, தந்தையை இழந்து, அங்கங்களைக்கூட இழந்து, பிச்சைப் பாத்திரங்களோடு சிறுவர்கள் அலைந்த வண்ணம் உள்ளார்கள்.

யாழ்.நகரப் பகுதிகளில்கூட இத்தகைய காட்சிகளைத் தினமும் காணமுடியும். வெளிநாட்டு - உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் பல, உலக மக்களின் வறுமையை ஒழிப்பதிலே அக்கறை கொண்டு உழைத்தாலும் இன்னும் வறுமையை ஒழிக்க முடியவில்லை. சிலரது வாழ்விலே வறுமை என்பது அவர்கள் பிறக்கும்போதே, கூடப்பிறந்த உடன் பிறப்பாகி விடுகிறது. வறுமையின் பிரபுக்களாக வாழ்வை கழித்துவரும் ஏழைகளின் துயரில் நாமும் பங்கெடுப்போம் என அனைவரும் உறுதி பூணுவோமாக.

**இன்று உலக வறுமை ஒழிப்புத்தினம் அதனையொட்டி இவ்வாக்கம் பிரசுரமாகிறது**



- இ. சர்வேஸ்

# நேபாளத்தில் நடைபெற்ற மோதலில் 4 மாணவர்கள் உட்பட 17 பேர் பலி!

## சிறுவர் உரிமையைப் பாதுகாக்குமாறு ஐ.நா .கோரிக்கை

நேபாளத்தில் அரச படையினருக்கும், மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற மோதலின்போது, இடையில் சிக்கி நான்கு மாணவர்கள் கொல்லப்பட்டதுடன், 13 மாவோ தீவிரவாதிகளும் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நாவுக்கான சிறுவர் பாதுகாப்பு அமைப்பும் மற்றும் சிறுவர்களின் உரிமைகளுக்காக வாதிடும் அமைப்புகளும் கூட்டாக இணைந்து - மாவோ தீவிரவாதிகளையும், அரச படைகளையும் போரின்போது சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு கேட்டுள்ளது.

நேபாளத்தில் நடைபெற்ற மோதல்களின்போது கொல்லப்பட்ட, மற்றும் காயமடைந்த மாணவர்கள் - மனித கேடயங்களாகப் பாவிக்கப்பட்டவர்களா அல்லது மாவோ தீவிரவாதிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையே நடைபெற்ற மோதலின் இடையில் சிக்கிக்கொண்டவர்களா என்பது குறித்து விசாரணை நடத்துவதற்கு, மனிதஉரிமை அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.



இதேவேளை, ஐ.நா. சபை - சர்வதேச குழந்தைகள் தொடர்பான சட்டங்களுக்கு இருபகுதியினரும் மதிப்பளிக்கவேண்டும் எனக் கேட்டுள்ளது.

நேபாளத்துக்கு உதவி வழங்கும் நாடுகளான பிரித்தானியாவும், அமெரிக்காவும் மனிதஉரிமைகளை மீறும் நடவடிக்கைகள் தொடர்ந்தால் வருங்காலத்தில் நேபாளத்திற்கான உதவிகள் குறித்து சிந்திக்கவேண்டியநிலை ஏற்படலாம் என எச்சரித்துள்ளன.

# எகிப்திய தலை ஒட்டிப் பிறந்த சிறுவர்கள் சில நாட்களில் சுயநினைவுக்கு திரும்புவர்!

## வைத்தியர்கள் தெரிவிப்பு



அமெரிக்காவிலுள்ள டல்லாஸ் வைத்தியசாலையில், வெற்றிகரமாக நடைபெற்ற ஒட்டிப்பிறந்த மொகமட்- அகமட் ஆகிய எகிப்தியச் சிறுவர்களின் மூளையில் ஏற்படும் வீக்கத்தைத் தவிர்த்துக்கொள்வதற்காக, கடந்த சில நாட்களாக கோமா நிலையில் வைக்கப்பட்டிருந்த சிறுவர்கள் இன்னும் சில நாட்களில் சுயநினைவுக்குத் திரும்பிவிடுவர் என, வைத்தியசாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

சத்திரசிகிச்சையின் போது, தொண்டைக்கூடாக சுவாசத்தை தொடர்வதற்கு - பொருத்தப்பட்டுள்ள குழாயை எதிர்வரும் புதன்கிழமை அகற்றவுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் இருவரதும் இரத்த அழுத்தங்கள் சீர்செய்யப்பட்டுள்ளதாகவும், சுவாசத்தை இயந்திரத்தினூடாகச் சிறிது காலத்திற்கு செயற்படுத்தவுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, சத்திரசிகிச்சையின் பின்னர் - எதிர்பார்க்கப்பட்ட தாக்கங்களான, மூளை வீக்கம், கிருமிகளின் தாக்கம், மண்டையோட்டுக்கும் மூளைக்கும் இடையேயுள்ள திரவத்தின் வெளியேற்றம் எதுவும் ஏற்படாதது, ஆரோக்கியத்தின் அறிகுறிகளென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## உலக நோக்கு

### பூமியை 14 முறை வலம்வந்த பின்னர்

# சீன விண்வெளி வீரர் பூமிக்குத் திரும்பினார்!



சீனாவின் முதலாவது விண்வெளி வீரர் ஜாங் லிஸய், பூமியை 14 முறை வலம் வந்தபின் மீண்டும் பூமிக்குத் திரும்பியுள்ளார்.

சீனாவின் வட பகுதியில் இருந்து, புறப்பட்டு 21 மணித்தியாலங்களின் பின்னர் அவர் பயணம் செய்த விண்கலம் தரையிறங்கியது. அவர் தனது கலத்திலிருந்து வெளியேறியதும், தலைநகர் பெய்ஜிங்கில் அரசியல் தலைவர்களை சந்திப்பதற்காகச் சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வானில், பரிசோதனைக்கூடம் ஒன்றினை அமைப்பதே தமது அடுத்த திட்டமென, சீன விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கோபி அனான் இது தொடர்பாக தனது கருத்தைத் தெரிவிக்கும்போது, விண்வெளி ஆராய்ச்சிகள் தேசிய எல்லைகளைக் கடந்தவையெனவும், 'சென்சூ த' என்ற கலத்தின் பணி - மனிதகுலத்தின் முன்னேற்றத்தின் ஒரு படியெனவும் தெரிவித்தார்.

# லைபீரிய ஆயுதக் கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க இணக்கம்!

லைபீரியாவில் இதுவரை அரசிற்கெதிராக போரில் ஈடுபட்டு வந்த இரண்டு தீவரவாதக் குழுக்களும், அரசு சார்பான குழுவும், ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு தீர்மானித்துள்ளன.

இவ் ஆயுதக் கையளிப்பு நவம்பர் நடுப் பகுதியில் ஆரம்பமாகும் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரியான "யாகுரஸ் கெலின்" செய்தி ஸ்தாபனமொன்றிற்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மோசஸ் பில்லாவின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ள கியூடி பிரயனர் - தீவிரவாதக் குழுக்களின் தலைவர்களை சந்தித்து ஆயுதங்களை மீண்டும் ஒப்படைப்பது குறித்தும், புதிய அரசு ஒன்றை உருவாக்குவதற்கு அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

# காஸாவில் நடந்த குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் மூவர் பொலிஸாரால் கைது!

## இராஜதந்திரிகள் கொல்லப்பட்டதற்கு புஷ் கடும் கண்டனம்



புதன்கிழமை அமெரிக்க இராஜதந்திரிகள் பயணஞ்செய்த தொடரணிமீது நடத்தப்பட்ட தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்பட்ட மூவரை, பலஸ்தீனப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காஸாவில் அமைந்துள்ள "ஜப லியா" அகதிமுகாமில்- பொலிஸாருக்கும், பலஸ்தீன தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சமரின் பின்னர், இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களில் சிலர் - அரபாத்தின் "பாத்தா" அமைப்பில் இருந்து பிரிந்து, தனியாகச் செயற்பட்டவர்கள் எனக் கூறப்படுகின்றது.

இதனிடையே சம்பவம் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென அமெரிக்கா கோரியுள்ள அதேவேளை, அரபாத்தின் செயல்பாடுகளை வன்மையாகக் கண்டித்தும் அமெரிக்க அதிபர் புஷ் கருத்துத் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, பி.பி.சிக்கு வழங்கிய பேட்டியில் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் - பலஸ்தீனிய மக்களின் நண்பர்களுக்கு எதிரான இந்தத் தாக்குதல் அவமானம் மிக்கதெனவும், இது குறித்து விசாரிப்பதற்கு - விசாரணைக் குழுவொன்றை உருவாக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பலஸ்தீனத்திலுள்ள அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் - அமெரிக்காவால் வழங்கப்படும் புலமைப்பரிசுக்கு பலஸ்தீனர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப்பரீட்சையை நடத்துவதற்குச் சென்றுகொண்டிருந்தவேளை, அவர்களின் வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு அமெரிக்க இராஜதந்திரிகள் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

# ஊர்சுற்றி எழுதுவது

கொழும்பிலிருந்து வெளிவரும் இரண்டு ஆங்கிலத் தினசரிகள் முஸ்லிம்களுக்காகவும், இந்தியாவின் நட்புறவுக்காகவும் குரல் கொடுப்பதைப் பார்த்தால் - இலங்கையில் பரிவும், பாசமும் சமாதானமும் இதற்குமேலும் தேவையா? என்று கேட்கத்தோன்றும்.

'இந்தியா இனியும் பார்வையாளராக இருக்கக் கூடாது, இலங்கை விவகாரத்தில் இனியும் சும்மா பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது.'

'இந்தியா இப்படி ஒதுங்கியிருந்ததால்தான், விடுதலைப்புலிகளுக்குச் சார்பான நோர்வேயின் தலையீடு இலங்கை விவகாரத்தில் மேலோங்கி நிற்கின்றது'

'ஜப்பானும் இதற்காகவே இலங்கை விசயத்தில் தலையிட்டு, அதிக நெருக்கம் கொண்டிருக்கிறது'.

'இனியும் இந்தியா பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், இந்தியாவின் பாதுகாப்பிற்கும் பொருத்தமான சமஷ்டி அமைப்பை உருவாக்குவதற்கு முன்வரவேண்டும்'.

இது மட்டுமா? 'இந்தியா தலையிட்டு, போராளிகளை இலங்கைப் படைகளில் சேர்த்து அவர்களின் படைகளைக் கலைத்து விடுவதற்கு முன்வரவேண்டும்'.

அதாவது, விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் களைந்து, ஆயுதப்போராளிகளை - இலங்கைப் படையில் சேர்த்துக்கொள்வதற்கு இந்தியா முன்வரவேண்டும்.

இப்படி இன்னும் பல யோசனைகளை இரண்டு ஆங்கிலத் தினசரிகள் - ஆசிரிய தலையங்கங்களாகவும், கட்டுரைகளாகவும் வெளியிட்டிருக்கின்றன.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கொழும்புக்கு வந்த சமயத்தில் - இந்தப் பத்திரிகைகள் இப்படித் தலையங்கங்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கின்றன.

இத்துடன், சிறுவர்களைப் பலவந்தமாகப் பிடித்துச்செல்வது, புலிகளுக்கு மாறான கருத்துக்களை கொண்டவர்களை கொலை செய்வது, முஸ்லிம்களுக்கு எதிரான செயல்கள் என்று செய்திகள், கட்டுரைகள், பத்திகள் என்று பக்கம் பக்கமாக - புலிஎதிர்ப்புப் பிரசாரம் செய்திருக்கின்றன.

இதேசமயம், மணிராசகுளத்தில் முஸ்லிம்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக- ஒரு பெரிய கட்டுரையையே ஒரு தினசரி வெளியிட்டிருக்கிறது.

முஸ்லிம்களின் பள்ளிவாசலை இடித்துத் தரை மட்டமாக்கிவிட்டு, அந்த இடத்தில்தான் - புலிகள் தங்கள் முகாமை அமைத்திருக்கிறார்கள் எனவும், அநாதரவாக நிற்கும் முஸ்லிம்களுக்கு ஆதரவு கொடுக்க யாரும் இல்லையா? என்றும் அக்கட்டுரை கேட்கிறது.

இப்படி புதுக் கரடிவிட்டு - இந்தப் பத்திரிகைகள் செய்திகளையும், கட்டுரைகளையும் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. அடிக்கடி இனவெறியையும், மத வெறியையும் தூண்டிவிடக்கூடிய செய்திகள், கட்டுரைகளை வெளியிடுவதுடன், ஆசிரியர் தலையங்கங்களையும் இவை எழுதிவருகின்றன.

அரசியல்வாதிகள்தான் ஆட்சி அதிகாரத்துக்கு போட்டியிட்டு, நாடு எப்படிப்போனாலும் பரவாயில்லை என்று நடந்து'கொள்கிறார்கள் என்றால் ஊடகத் துறையினரும் இப்படியா?

ஆங்கிலப் பத்திரிகைகளே இப்படிச் செய்யுமானால், இவற்றின் சகோதர சிங்களப் பத்திரிகைகள் என்னவெல்லாம் வெளியிடும்?

தமிழர்கள் இன்னமும் - சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தால், தமிழர்களுக்கு சமாதி வைத்திருப்பார்கள். இப்படித்தான் 1958, 1977, 1983 ஆம் ஆண்டுகளில் நடந்தது.

இன்று புலிகளின் கைகளில் ஆயுதங்கள் இருப்பதாலும், போர்புரியும் திறன்மிக்கவர்களாக இருப்பதாலும் - காடையர்களால் தலைதூக்க முடிவில்லை.

இந்த நிலையில்தான் - ஊடகங்கள் இந்தியா தலையிடவேண்டும், கைகொடுக்கவேண்டும் 'என்று கோரிக்கை விடுகின்றன.

மாவனெல்ல, உடத்தலவின்ன சம்பவங்களை முஸ்லிம்கள் [illegible]ந்துவிட்டார்கள் என்ற நினைப்பில், தமிழர்களுக்கு எதிராகச் சிண்டுமுடியும் வேலையில் ஆங்கில, சிங்கள ஊடகங்கள் இறங்கியிருக்கின்றன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் திட்டத்தைப் புலிகள் சமர்ப்பிக்க முன்னரே, இங்கே ஊடகங்களுக்கு எவ்வளவு அவசரம்.

இது ஊடகங்கள் மட்டும் சம்பந்தப்பட்டதாக இராது, பின்னணியில் வேறு சக்திகளும் இருக்க வேண்டும் என்கிறார் நண்பர்.

இந்தியா மீண்டும் தலையிடுமா? இலங்கையின் தேசாபிமானம் எங்கே நிற்கின்றது?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

தலதா மாளிகை குண்டுவெடிப்பு தொடர்பான வழக்கில் மூவருக்கு மரண தண்டனையுடன், சிறைத் தண்டனையும் வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மரண தண்டனை வழங்கப்பட்டவருக்கே 680 வருட சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளதுதான் வினோதமானது.

மரண தண்டனை வழங்கினால் 680 வருட சிறைத் தண்டனையை அவர் எப்படி அனுபவிப்பது? சிறைத் தண்டனையை அனுபவிக்க விட்டால் மரணதண்டனையை எந்த யுகத்தில் நிறைவேற்றுவது? யாருக்கு நிறைவேற்றுவது?

எதுவோ... சிறிலங்கா நீதிமன்றின் தீர்ப்பு அப்படித்தான் கூறுகிறது.

முன்னர் ஒரு வழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரனுக்கும், அவரை நேரில் விசாரிக்கும் தகைமையில்லாமலேயே 200 ஆண்டு சிறைத்தண்டனையும் விதித்தவர்களல்லவா?

சிறைத்தண்டனை விதிப்பதில் சிறிலங்கா முறியடிக்கவேமுடியாத கின்னஸ் சாதனையை நிலைநாட்டமுடியும்...

நவாலி தேவாலய குண்டுத் தாக்குதல், நாகர்கோவில் குண்டுத் தாக்குதல், சுதந்திரபுரம், மந்துவில் குண்டுத் தாக்குதல் இவற்றையெல்லாம் விசாரித்தால், அவற்றிற்கெல்லாம் காரணமான கடந்த அரசின் மிக - மிக - முக்கிய பிரமுகர்களுக்கு பல்லாயிரம் ஆண்டு சிறைத்தண்டனையை வழங்கவேண்டிவரும்... அதன் மூலம் அந்தச் சாதனையை நிலை நாட்டலாமல்லவா? என்கிறார் ஒரு முன்னாள் அரச அதிகாரி...

-தெருவாசி

வவுனியாவில்

# சிறுமிகளைக் கடத்திய 3 இளைஞர்கள் கைது!

(வவுனியா)

வவுனியாவில் காணாமல்போன இரண்டு சிறுமிகள் மீண்டும் கண்டு பிடிக்கப்பட்டது தொடர்பாக, கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களையும், பலத்த பாதுகாப்பில் வைத்திருக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சிறுமிகள் இருவரும், விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணையச் சென்றவர்கள் என்று கருதப்பட்டு, மன்னாருக்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள். பின்னர், இவர்கள் பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து, விடுதலைப் புலிகளினால், மறவன்குளம் வீட்டுத்திட்டப் பகுதியிலுள்ள வீடொன்றில் கண்டு பிடித்து, பெற்றோர்களிடம் கண்காணிப்புக்குழு ஊடாகக் கையளிக்கப்பட்டனர்.

இதனையடுத்து, நடத்தப்பட்ட விசாரணைகளில் கிடைத்த தகவலையடுத்து, அந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். சிறுமிகள் இருவரும் அநுராதபுரம் வைத்தியசாலையில் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டனர் எனவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(வரைவுள்ளது)

## முக்கிய அறிவித்தல்

### மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ. சங்கம்

**11.10.2003 ஆம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் அறிவிக்கப்பட்டதற்கமைய 18.10.2003 சனிக்கிழமை அன்று நடைபெறவிருந்த கிளைக்குழு உறுப்பினர்களுக்கான தெரிவு-தவிர்க்கமுடியாத காரணத்தினால் அன்றைய தினம் நடைபெறமாட்டாது எனவும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளுக்கு அமைய 26.10.2003 ஞாயிற்றுக்கிழமை- இக் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு நடைபெறும் என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.**

செயலாளர்,
மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ. சங்கம்,
மானிப்பாய்.

(சி-1680)

## ITN இன் தீபாவளி மலிவு விற்பனை

09.10.2003 தொடக்கம் 24.10.2003 வரை
ITN இன்
மாபெரும் மலிவு விற்பனை

- தமிழ் புதிய, பழைய ஓடியோ CD
- தமிழ் புதிய ,பழைய வீடியோ CD
- கர்நாடக சங்கீத CD
- MP3 CD
- இந்து, கிறிஸ்தவ பக்திப் பாடல்கள்
- DVD

ACD, VCD, MP3 70 ரூபாவில் இருந்து

அனைத்தும் மாபெரும் மலிவு விலையில்!!
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்!!

ITN வீடியோ ஓடியோ மியூசிக் சென்ரர்
305, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி
(507)

இந்த விலைக்கழிவு தீபாவளி தினம் வரை மட்டுமே

# இடைக்கால நிர்வாகத்துக்கு....

முடிந்துள்ளது. இதனை தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் சமர்ப்பித்து அவரது பரிசீலனையின் பின் நோர்வே அனுசரணையாளர்களூடாக இலங்கை அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ளோம்.

இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்றின் மூலமே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உறுதிசெய்யப்பட்ட சமாதானத்தின் பலாபலன்களான இயல்பு நிலை, அமைதி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு என்பவற்றை மக்களுக்கு விரைவாக வழங்கமுடியும். இதை மனதில் கொண்டே சமாதானப் பேச்சு வார்த்தைகளின் இரண்டாம் கட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி மனிதாபிமான தேவைகளை கவனிக்க சிரான் என்ற உப குழுவை இருதரப்பும் இணங்கி நிறுவினோம்.

துரதிர்ஷ்ட வசமாக அந்த உப குழு அரசின் அசமந்தப்போக்கால் செயலிழந்து போய்விட்டது. இதன் விளைவாகவே ஓர் செயற்றிறன் மிக்க அமைப்பின் அவசியம் எழுந்தது.

இந்த வரைபை உருவாக்குவதில் எங்கள் தமிழ்சமூகத்தைச் சேர்ந்த வெளிநாடுகளில் வாழும் சட்ட வல்லுநர்களும் அரசியலமைப்பு விவகாரத்தில் அனுபவம் மிக்கவர்களும் பங்கெடுத்ததுடன் அயர்லாந்து நகரில் வரைபை மீளாய்வு செய்த பொழுது வட அயர்லாந்துப் பல்கலைக்கழக அரசியலமைப்பு விவகாரப் பேராசிரியர், பாராளுமன்றப் பிரதிநிதிகள் இனப்போர்களில் சமாதானத் தீர்வில் பங்குகொண்ட பேராசிரியர்கள் போன்ற பலர் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். இதையும்விட உலகின் பல பகுதிகளிலும் இனப்பிரச்சினைத் தீர்வுகள் இறுதிசெய்யப்பட முன்பாக ஏற்படுத்தப்பட்ட இடைக்கால ஒழுங்குகள் பற்றியும் இலங்கையில் ஐம்பதுகள் தொடக்கம் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைத்தீர்வு தொடர்பாக எய்தப்பட்ட ஒப்பந்தங்கள் சகலதுமே பலனளிக்காது போனதன் காரணங்களையும் கருத்திற்கொண்டே இந்த வரைபிற்கு இறுதிவடிவம் கொடுத்துள்ளோம். வடக்கு - கிழக்கில் வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும் கௌரவத்துடனான சமாதானமும் கிட்டுவதற்கான இறுதித்தீர்வை நோக்கிய எங்கள் முயற்சியில் இடைக்கால நிர்வாக அமைப்பு ஓர் முக்கியமான அம்சமாகும்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருதரப்பாலும் இணக்கம் காணப்பட்ட இயல்புநிலை தோற்றுவித்தல், மீள் குடியேற்றம் மற்றும் இராணுவ நெருக்குவாரமற்ற அமைதியான வாழ்வு என்பவை மூலமே மக்களுக்கு சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கையை ஊட்ட முடியும். இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இராணுவ நடவடிக்கைகளால் தமது வீடுவாசல்களைவிட்டு விரட்டப்பட்ட மக்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு ஒன்றரை வருடம் கடந்த நிலையிலும் அகதிமுகாம்களில் அல்லல்படுகின்றனர். மக்கள் அடர்த்தியாக வாழும் இடங்களிலும் இராணுவம் தனது ஆயுதப் பிரசன்னத்துடன் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்திக்கொண்டு ஆக்கிரமித்து நிற்கிறது. விவசாயிகள் தமது சொந்த இடங்களில் குடியேறி விவசாயம் செய்யமுடியாத விதத்தில் இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயம் பெரும் தடையாக உள்ளது. மீன் பிடிப்போர் கடலுக்குச்செல்ல கடற்படை பலவிதமான கட்டுப்பாடுகளை விதிக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் மக்கள் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த முடியாத அரசியல் பேச்சுவார்த்தையிலும் சமாதான முயற்சிகளிலும் மக்கள் நம்பிக்கை இழந்து நிற்கிறார்கள். இதைச் சர்வதேச சமூகம் கருத்தில் எடுத்து அண்மைக்காலமாக வடக்குக்கிழக்கில் அதிகரித்து வரும் இராணுவ நெருக்குவாரங்களையும் முறுகல் போக்கையும் தவிர்த்து ஓர் இயல்புநிலையை உருவாக்கி இடைக்கால நிர்வாக அமைப்புக்கு விரைவில் செயலுருவங் கொடுக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பது அவசியமாகிறது. இது மேலும் தாமதமாகுமானால சமாதான முயற்சிகளில் பெரும் பின்னடைவுகள் ஏற்படலாம். இலங்கைத் தீவில் எல்லோருக்கும் அமைதி ஏற்படவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் விருப்பை நிறைவேற்ற இது ஒன்றே வழி சமைக்கும் எனத் தெரிவித்தார்.

தமிழ்ச்செல்வனின் கருத்துகளைக் கரிசனையுடன் கேட்ட வெளியுறவு அமைச்சர் நிலமையைத் தெளிவாக விளங்கிக்கொண்டதாகவும் ஏற்பாட்டாளர்கள் என்ற வகையில் தங்களாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு தமிழ்மக்களின் பிரச்சினைத்தீர்வுக்கும் நிரந்தர அமைதி கிட்டுவதற்கும் சர்வதேச அபிப்பிராயத்தை வலுவுள்ளதாக்கி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆவன செய்வதாக வாக்குறுதியளித்தார்.

## ஜனாதிபதி....

அண்மைக்காலங்களில் அமைக்கப்பட்டுவரும் விடுதலைப் புலிகளின் முகாம்கள், திருகோணமலையில் இருக்கின்ற படையினரின் தளங்கள், கடற்படையினரின் கப்பல் நிர்மாணிக்கும் தளம், துறைமுகம் ஆகியவற்றுக்கு அச்சுறுத்தலாகும் என, இந்தப் பேச்சுவார்த்தையின்போது, ஜனாதிபதி சந்திரிகா பிரதமரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

லஞ்சஊழல் ஆணைக்குழுவின் மறுசீரமைப்புத் தொடர்பாக ஜனாதிபதியின் இணக்கமின்மையே இந்தச் சந்திப்புக்கு வழிவகுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இன்றைய பேச்சுவார்த்தையின்போது, எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## பதில்....

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அரசியலமைப்பு மன்றம், பொலிஸ்மா அதிபரை நியமிப்பதில் எடுக்கும் காலதாமதம் காரணமாக, ஜனாதிபதி இந்த முடிவை எடுத்திருக்கின்றார் எனவும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆனந்தராஜா.......

அதிபருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எதிராக தெளிவான ஆதாரம் எதுவும் கிடையாதெனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை - அமைச்சின் செயலாளருக்கு உளவுத்துறை தமது அறிக்கையை கையளித்திருக்கிறது.

சி.ஐ.டியினர் உள்துறை அமைச்சின் செயலாளர் வழங்கிய அறிக்கையில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவையல்ல எனக் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

## புலிகளின்...

தப்படும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான தமது மாற்றுக் கருததுக்களை இம்மாத இறுதிக்குள் வழங்குவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான தீர்மானங்கள் கைகளுக்கு எட்டியவுடன், இரு தரப்புகளுக்குமிடையில் இருக்கின்ற இடைவெளிகளை நிரப்புவதற்கு, நேரடிப் பேச்சுவார்த்தை அவசியமென அமைச்சர் வலியுறுத்தினார்.

2003 ஆம் ஆண்டிற்கான
கனணிப் பயிற்சி நெறியின்
இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்
18.10.2003 பயிற்சி நெறிகளுக்கு
பதிவுக் கட்டணம்
அறவிடப்படமாட்டாது.
Soft View Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna.
T.P.2225170 (சி-1677)

# இனப்பிரச்சினை தீர்வு...

ளில் பெரும்பாலானோர் தமது உடைந்த வீடுகளைத் திருத்தியமைத்துக் குடியிருக்கின்றார்கள்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமஷ்டி கட்டமைப்புக்களான அடித்தளமாக - புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதை வரவேற்கின்றேன். எனது நாடு சமஷ்டி முறையில் நீண்ட அனுபவமுடையது. பல இன மக்களும் எவ்வாறு ஒன்றாக வாழ்கின்றார்கள் என்பதனை நாம் கற்றுள்ளோம்.

விடுதலைப் புலிகள் மீளவும் பேச்சு மேசைக்குத் திரும்ப வேண்டும். அத்துடன் யுத்த நிறுத்த உடனபடிக்கையையும் மதித்து நடக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய இடைக்கால நிர்வாக வரைபு ஒன்று இடம்பெற வேண்டுமென்றாலோ, போரால் சிதைந்துபோன வடக்கு - கிழக்கை கட்டியெழுப்புவதற்கோ, 6 மாதகாலமாக ஒரு தலைப்பட்சமான முறையில் பேச்சில் இருந்து விலகியுள்ள விடுதலைப் புலிகள் மீளவும் பேச்சுக்கு வரவேண்டும்.

சிறுவர்களை ஆட்சேர்ப்பது, அரசியல் படுகொலைகள் உடனே நிறுத்தப்படுவதுடன் மனித உரிமைகள் மதித்து நடக்கப்படவேண்டும். பல தரப்பட்ட ஜனநாயக முறையிலான சமூக அமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

உள்ளூரில் இடம்பெயர்ந்திருந்த மக்கள் மீளக் குடியேறுவதற்கு, புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் தடையாகவுள்ளன. அண்மையில் இந்தக் கண்ணிவெடிகளால் கனடா நாடு தனது படைகளில் சிலரை ஆப்கானிஸ்தானில் இழந்துள்ளது. இந்தக் கண்ணிவெடிகளுக்கு எதிராக, ஒட்டாவா உடன்படிக்கையை மதித்து நடக்கச்சொல்லி நான் விடுதலைப் புலிகளையும் அரசையும் கேட்கிறேன்.

கனடாவின் சர்வதேச அபிவிருத்தி நிறுவனமும், கனேடியப் பல்கலைக் கழகமும் இணைந்து இலங்கையில் தொழில் இல்லாதவர்களுக்கு - கல்வியோடு இணைந்த புனர்வாழ்வுப் பயிற்சிநெறி என்ற தொழிற்பயிற்சி நிலையத்தை நடத்திவருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் பயங்கரவாதம் தொடர்பான சட்டவிதிகள் உள்ளமையால், அதற்கு கனடா அரசு கட்டுப்பட வேண்டிய கடப்பாடு உள்ளது. எனவேதான், விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் சமாதானப் பேச்சுக்கள் நல்ல முறையில் நடைபெற்றால் அந்தத் தடையை நீக்குவது தொடர்பாக கனடா சிந்திக்கும்.

உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்கினால், படைத் தரப்பிற்கு விடுதலைப்புலிகளுடனான சமபலம் (Blance of power) இல்லாமல் போய்விடுமென இது தொடர்பானவர்கள் தெரிவித்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தீ விபத்தில்...

முன்தினமிரவு ஏற்பட்டிருக்கக்கூடும் என்று நேற்றுக் காலை கிராம வாசிகள் இதனை அவதானித்தாக தெல்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

## பொ.ஐ.மு.....

தான முயற்சிகளை எதிர்ப்பது அவர்களின் அரசியல் நடவடிக்கைகளுக்கு நல்லதாக அமையாது.

தனிச்சையாக அரசாங்கம் எந்த முடிவுகளையும் எடுக்கக் கூடாது எவவாறாயினும் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## தேவை

**ஓவ்செற் அச்சு இயந்திர இயக்குநர்கள், சொலனா (Solna 125) அச்சு இயந்திரத்தை இயக்குவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை**

தகைமையுடையவர்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

மேற்படி அச்சு இயந்திர இயக்குநர்களாக பயிற்சிபெற்று பணியாற்ற ஆர்வமுடைய அச்சுத்துறையில் அனுபவமுடையோரும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.